
பண்ணை கிளை நூலகம்
மா நகர சபை
யாழ்ப்பாணம்

# சாளரம்

இளையோர் திங்கள் இதழ் ● ஜூலை - ஒகஸ்ட் 1993 ● விலை 12 ரூபா



மங்கல் ஒளியினில் கல்வித் தேடலும் -
மரணப் பொறியினுள் பயணம் தொடர்தலும்-
மாடாய் சுமைகள் இழுத்துச்சுமந்து
மனித வாழ்வது நகரும் காட்சியும்...

'ஹைட்றோ புறடக்ஸ்'

உங்களை அழைக்கின்றது!

ஒப்பந்த வேலைகள் -

மரக்கொள்கலன்கள் - இரும்பு நிர்மாண வேலைகள்.

## குடாநாட்டின் நம்பிக்கைமிகு
## தொழில் நுட்பவியலாளர்கள்

தொடர்பு கொள்க

# HYDRO PRODUCTS

**'ஹைட்றோ புறடக்ஸ்'**

முதலாம் ஒழுங்கை

தெல்லிப்பளை வீதி,

**வட்டுக்கோட்டை.**

கதவு 03 (19) காற்றலை 04

பொது சன நூலகம்
மாநகராட்சி மன்று
31 - 7 - 1993
யாழ்ப்பாணம்

# மூன்றாம் ஆண்டில்...

**சா**ளரம் தனது மூன்றாம் ஆண்டில் கால்லடி எடுத்து வைக்கின்றது.

இடையூறுகள் பலவற்றிற்கு இடையில் கடந்த இரண்டு ஆண்டுகளில், இவ்விதழுடன் சேர்த்து 19 இதழ்கள் வெளிவந்துள்ளன.

ஒவ்வொரு முறையும் 5000க்கு மேற்பட்ட சாளரம் இதழ்கள் பரவலாக தமிழ்மக்களால் வாசிக்கப்படுகின்றன.

பரவலாக சாளரம் வாசிக்கப்பட்டபோதும் தொடர்ச்சியாக வாசிக்கப்படாமை ஒரு பெரும் குறையாகும். இதற்கு வழங்கல் முறையில் உள்ள குறைபாடே காரணமாகும். இதனால், நாம் எதிர்பார்த்த பலனை வாசகர்கள் பெறவில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

யாழ் குடா நாட்டிற்கு வெளியே தமிழீழமெங்கும் சாளரம் பரவலான வாசகர்களைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

இளையோரின் அறிவியல் அறிவையும் எழுத்தாற்றலையும் வளர்க்க சாளரம் தன்னாலான பங்களிப்பை சிறப்பாக தொடர்ந்தும் செய்ய விரும்புகின்றது.

இளையோருக்காக சாளரம் என்றும் திறந்தே இருக்கின்றது. சாளரத்தின் வளர்ச்சியில் பங்கு கொண்ட வாசகர்கள், எழுத்தாளர்கள் எல்லோருக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். தொடர்ந்தும் உங்கள் ஆதரவை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

## இந்த இதழில்...


- ☐ ஆசிரியர் தலையங்கம்.
- ☐ அறிவுலகம்
- ☐ வெற்றிப் படியில் எமது மருந்துகள்.
- ☐ விளையாட்டுச் செய்திகள்
- ☐ பதவிக்கு வரும் அரசும் பாழ்படும் விளைநிலமும்
- ☐ கலைச் சொல் அகராதி
- ☐ தெறிப்பு
- ☐ வடமராட்சி கிழக்கில் வளராத கல்வி நிலை
- ☐ பயம் - பதற்றம்
- ☐ இளம்பிள்ளைகளின் சுவை உணர்ச்சிகளை விழிப்புறச் செய்யும் கல்வி முயற்சி
- ☐ விவேகம் மிகுந்த பிள்ளைகளும் வித்தியாசமான பெற்றோரும்
- ☐ சிக்கனம் காக்க இரட்டைச் சூட்டடுப்பு
- ☐ பொது சமையல் கூடமும் பெண் விடுதலையும்
- ☐ அரும்புகள்
- ☐ எரித்திரியா புதிய ஒரு நாடு
- ☐ பகலவன் பதில்கள்
- ☐ கையிலே கதிர் வீச்சுக் கருவி

தமிழீழ மாணவர்கள் புத்திஜீவிகளாகவும் எதனையும் பகுத்தறிந்து சிந்திக்கும் ஆற்றலுடையவர்களாகவும் வளரவேண்டும் என்கிற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே சாளரம் இதழ் வெளிவருகின்றது.

மாணவர்கள் மேலும் பயன்பெறும் வகையில் சில புதிய விடயங்கள் சாளரத்தில் சேர்க்கப்படவேண்டும் என்ற கருத்தினை பல மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் முன்வைத்துள்ளனர். அதற்கிணங்க அறிவுலகம் என்ற தலைப்பில் புதிய பகுதி இவ்விதழிலிருந்து ஆரம்பமாகிறது. அறிவியல் தொடர்பான உங்கள் ஐயப்பாடுகளைத் தீர்த்துக்கொள்ள உங்கள் கேள்விகளை எமக்கு அனுப்பிவையுங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:-
'அறிவுலகம்'
சாளரம்
வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

க. செந்தில்நாதன்
வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

தற்பொழுது ஆனையிறவு உப்பளம் இயங்காத நிலையில் எமது உப்பேரிகள், கடல் நீரேரிகளில் விளையும் உப்பைப் பயன்படுத்துகின்றோம். அது மிகவும் மலிவாகக் கிடைக்கின்றது. இது எமது உடலுக்கு நல்லதா?

வெப்பம் அதிகமான காலங்களில் எமது பிரதேச கடல் நீரேரிகளிலும், ஆற்று வாய்களிலும் பெருமளவு உப்பு படிவடைகிறது. இது உடலுக்கு நல்லதல்ல. விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்ட உப்பளங்களில் கடல் நீரில் உள்ள பல்வேறு உப்புக்கள் ஒவ்வொரு படிமுறைகளினூடாக அகற்றப்பட்டு ஓரளவு தூய தன்மையான சோடியம் குளோறைட்டுக் கொண்ட கறி உப்பு பெறப்படுகிறது. ஆனையிறவு போன்ற உப்பளங்களில் இருந்து பெறப்படும் கறியுப்பில் மக்னீசியம் உப்புக்கள் மிகக்குறைவாகவே காணப்படும். எமது யாழ்ப்பாணப் பிரதேசத்தில் விளையும் உப்பு என்று கூறப்படும் கறி உப்பில் பெருமளவு மக்னீசியம் உப்புக்களும் மாதக்கணக்காகக் காணப்படுகின்றன. 'மக்னீசியம்' எமது உடலுக்கு மிகச்சிறிதளவிலேயே தேவை. அதிகளவில் பயன்படுத்தப்படுமானால், உடலுக்குத் தீங்கு விளைவிக்கும். இது சிலவேளைகளில் கண்பார்வைக் குறைபாடுகள், உடற்தொழிற்பாடுகள் சீரற்ற முறையில் இயங்குதல் போன்ற விளைவுகளை ஏற்படுத்தலாம்.

த. சித்திராவதி. ரேவதி
புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

பௌர்ணமி தினங்களில் கடல் அலைகள் ஏன் உக்கிரமாகப் பொங்கி ஆர்ப்பரிக்கின்றன? சந்திரனின் தெய்வீகத் தன்மையினால் கடல் அலைகள் ஆர்ப்பரிக்கின்றன என்ற நம்பிக்கையில் உண்மையுண்டா?

அது தவறான ஒரு நம்பிக்கை. பௌர்ணமி தினங்களில் பூமியின் மேற்பரப்பில் சந்திரன் வருகின்றது. பூமிக்கு ஈர்ப்பு சக்தி இருப்பதால் பொருட்கள் எவ்வாறு விரைவாக ஈர்க்கப்படுகின்றனவோ அதேபோன்று சந்திரனுக்கும் ஈர்ப்பு சக்தி உண்டு. சந்திர ஈர்ப்பு சக்தியினால், கடல் அலைகள் மேலே இழுக்கப்படுகின்றன. இதனாலேயேபௌர்ணமிதினங்களில்மட்டுமல்ல பொதுவாக பகலைவிட இரவுநேரங்களில் கடல் அலைகள்மேலே உயரத்திற்கு பொங்கி ஆர்ப்பரிப்பதைக் காணலாம்.

ந. கண்ணன்
யாழ் / உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி,
வல்வெட்டித்துறை.




மருத்துவ விஞ்ஞானத்தில் "பையோனிக்ஸ்" என்னும் துறைபற்றி தற்பொழுது அடிக்கடி பேசப்படுகிறதே இது பற்றிய ஒரு விளக்கத்தைத் தரமுடிமா

"பயோனிக்ஸ்" என்றால் "பயலொஜிக்கல் எலக்ரோன்ஸ்" அதாவது "உயிரியல் இலத்திரன்கள்" என்ற பொருள்படும். இலத்திரன்கள் இல்லாவிடில் இன்று நவீன யுகப் பிரவேசத்திற்குக் கால்கோளாக அமைந்த, இலத்திரனியல் துறையே இல்லாது போயிருக்கும் தற்போது மருத்துவத்துறையில் இலத்திரனியல் துறையும் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இன்று பிரபல்யமடைந்துள்ள எக்ஸ் கதிர் (X - Ray) புற்றுநோயைக் குணப்படுத்தவும், கத்தியின்றி, ரத்தமின்றி அறுவைச் சிகிச்சையை மேற்கொள்ளவும் பயன்படும் லேசர் கதிர் வீச்சு முறை, சத்திரசிகிச்சையின் போது நோயாளியின் சுவாசிக்கும் தன்மையை அறியும் கருவி, நரம்பு நோய்களைக் குணப்படுத்தும் கருவி, பாரிசவாத நோய்களுக்கு உதவும் "எலக்ரோனிக்ஸ் சிமுலேற்றர்கள், இதயத்துடிப்பை ஊக்குவிக்கும் கருவி

முதலியனவும்'' கணணி இயந்திரமும் இன்று மருத்துவத் துறையில் செல்வாக்குச் செலுத்தும் இலத்திரனியல் சாதனங்களாகும். மேலும், இன்று ஒருவகை திரான்சிஸ்ரர்களை மனிதனின் உடற்கூற்று நிலைமைகளை வெளிப்படுத்திக் காட்டப் பயன்படுத்துகின்றார்கள். இக் கருவி ஒரு மாத்திரை போன்று அளவில் சிறியதாக இருக்கும். இதனை நோயாளிகளை விழுங்கச் செய்வார்கள். இந்த மாத்திரை நோயாளியின் வயிற்றை அடைந்ததும் அது வயிற்றினுள் இருக்கும் உடற்கூற்று நிலைமைகளை நேர்முக வர்ணனை செய்து அவரது நோயின் தன்மையைப் பற்றி அறியவுதவும்

இத்தகைய சாதனைகள் செய்வதற்குக் காரணமாக இருப்பது இலத்திரன்கள். அதனாலேயே உயிரியல் ரீதியான ஆய்வுகளுக்கும் பயன்படுவதால் இவை 'பயலொஜிக்கல் இலத்திரன்கள்' என்பதன் சேர்க்கையான, "பயோனிக்ஸ்'' என்ற பெயரிலான ஒரு புதிய துறையாக மருத்துவத்தில் பேசப்படுகிறது.

பழனி, மானிப்பாய்.

❀ ஆணுக்கும், பெண்ணுக்கும் அறிவில் வேறுபாடு உண்டா?

அறிவில் இருபாலாருக்கும் வேறுபாடு கிடையாது. அறிவை வளர்த்துக்கொள்ளும் சூழ்நிலை, சந்தர்ப்பங்கள், வசதிகள் ஆகியவற்றை பொறுத்தே ஒருவருக்கு அறிவு கூடுதலாகவும், குறைவாகவும் அமைகின்றது

தி. மாலதி, கந்தர்மடம்.

❀ விசம் குடித்து இறந்தவர்களின் கண்களை மற்றையோருக்கு தரலாமா?

கண்ணில் இருக்கும் 'கார்ணியா' (Cornea) என்னும் கருவிழியை மட்டுமே எடுத்து பொருத்துவார்கள். கருவிழியில் இரத்த நாளங்களோ, நரம்புகளோ இல்லை. அதனால் மற்றையோருக்கு தரலாம்.

இ. கண்ணகி, சாவகச்சேரி.

❀ கிணற்று நீரை கொதிக்க வைத்து குடிக்கும்போது சுவை போய் விடுவதற்கு காரணம் என்ன?

நீருக்கு சுவைகிடையாது. அதில் கரையும் தாதுப் பொருட்களே அதற்கு சுவை தருகின்றன. நீரைக் கொதிக்கவைத்ததும் இவற்றில் சில ஆவியாக வெளியேறிவிடுகின்றன. சில பிரிந்து அடியில் அல்லது பக்கங்களிலும் தங்கிவிடுகின்றன. அதனால் சுவை இல்லாமல் போய் விடுகின்றது.

# பயன்தரும் குறிப்புகள்

● நாம் உண்ணும் உணவின் சக்திப் பெறுமானம் கலோரியில் அளவிடப்படுகிறது. எமது உடல் இயங்குவதற்கு குறிப்பிட்டளவு சக்தியைக் கொடுக்கும் உணவுகள் உட்கொள்ளப்பட வேண்டும். நாளொன்றுக்கு தேவையான கலோரி வயது அடிப்படையில்:—

| | | | | |
|---|---|---|---|---|
| 11 - 14 | வயது | ஆண்கள் | 2800 | கலோரி |
| 15 - 18 | ,, | ,, | 3000 | ,, |
| 19 - 22 | ,, | ,, | 3000 | ,, |
| 23 - 50 | ,, | ,, | 2700 | ,, |
| 11 - 14 | ,, | பெண்கள் | 2400 | ,, |
| 15 - 18 | ,, | ,, | 2100 | ,, |
| 19 – 22 | ,, | ,, | 2100 | ,, |
| 23 - 50 | ,, | ,, | 2000 | ,, |
| 51 க்கு | மேல் | ,, | 1800 | ,, |
| கருவுற்ற பெண்கள் மேற் கண்ட அளவுடன் | | | +300 | ,, |
| பாலூட்டும் பெண்கள் மேற்கண்ட அளவுடன் | | | +500 | ,, |

இதற்கமைய

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | கிராம் | புரதம் | தருவது | 4 | கலோரி |
| 1 | ,, | காபோவைதரேற்று | ,, | 4 | ,, |
| 1 | ,, | கொழுப்பு | ,, | 9 | ,, |

இந்த அளவுத் தினசரி ஒருவர் சக்திப் பெறுமானமுள்ள உணவைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

● நெருப்பில்லாமல் புகை தருவதற்கு அமோனியம் ஐதரொட்சைட்டு, ஐதரோக் குளோரிக்கமிலங்களின் திரவங்களில் தோய்த்தெடுத்த பஞ்சு, அல்லது கண்ணாடிக் குழாயைப் பிடிக்கும் பொழுது வெண்ணிற புகை உண்டாகும். இவ்வாறு உண்டாகும் புகை அமோனியம் குளோறைட்டுச் சேர்வையாகும்.

● பூமி சூரியனைச் சுற்றுகின்றது எனச் சொன்ன கியாடானோ புருனோ என்ற விஞ்ஞானி ''பொய்யன்'' என்று நிருபிக்கப்பட்டு கழுவில் ஏற்றி, உயிருடன் எரிக்கப்பட்டார். இது கி. பி. 1600 இல் நடந்தது.

● டொல்பின்கள் 32 வகையான ஒலிகளை எழுப்புகின்றன. இவற்றை 32ஒலி எழுத்துக்கள் என கணக்கிடுகின்றனர். இதையே டொல்பினின் மொழி எனக் கூறுகின்றனர். ஒரு ஒலி எழுத்தை எழுப்ப டொல்பினுக்கு 3 செக்கன் பிடிக்கின்றது. மற்ற விலங்குகளை விட டொல்பின்கள் மிகவும் அறிவுக்கூர்மையானவை என கருதப்படுகின்றது.

தொகுப்பு:- ஆனந்தி

சித்த மருத்துவத்தின் வரலாற்றில் புதுமையான மாற்றங்கள். நாற்பது வருடத் தூக்கத்தைக் கிழித்த படி வேகமான விழிப்பு.

26. 1. 1993ல் நாட்டு மருந்து உற்பத்தித் தொடர்பான ஒன்றுகூடல் நடைபெற்றது. இந்நிகழ்விலே சித்த மருத்துவ அறிஞர் திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்கள் கலந்துகொண்டார். அவர் தெரிவித்த எண்ணங்கள்-

● யாழ்குடாநாட்டில் 1954ல் அகில இலங்கைச் சித்தவைத்திய சங்கம் உருவானது. 1972ல் அரசினர் ஆயுர்வேத வைத்திய நிலையத்தில் மருந்துச்சாலையை அமைத்தது. எதிர்பார்த்த இலக்கு தோல்வியில் -

1974ல் ஆயுர்வேத மருந்துக்கூட்டுத்தாபனம் மருந்துச்சாலையை மீண்டும் ஏற்படுத்தி மருந்தைச் செய்து வந்தது. 1977ல் சித்தமருந்துகளை உருவாக்கும் முயற்சியில் இக்கூட்டுத்தானம் இறங்கியபோது – அதற்கு

# வெற்றிப்படியில் எமது மருந்துகள்

இத்துறைசார்ந்த அறிஞர்களின் பங்களிப்புக்கிடைக்கவில்லை. கூட்டுத்தாபனமும் சித்த மருத்துவத்தை ஊக்கப்படுத்திட விரும்பவுமில்லை.

இது இவ்வாறாக, 1984ல் சித்தவைத்தியப்பிரிவு கைதடியில் அமைக்கப்பட்டு மருந்து தயாரிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக 1990 முதல் சித்த மருந்துகளின் முக்கியத்துவம் மீண்டும் மக்களால் உணரப்பட்டவேளையில் சிறிலங்கா அரசு தமிழீழத்தில் போரைத் தொடர்ந்தது.

### மருந்து உருவாக வேண்டும் அறிவு – உழைப்பு

● எமது முன்னோர்கள் ஏட்டில் எழுதிவைத்த முறையின்படி மருந்துகளை உருவாக்குகின்றோம். அந்தவகையில் இங்கே இப்போது மருந்தைச் செய்ய ஒருவர் எண்ணினால் அதற்கான எல்லாச் சரக்குகளையும் கடையில் பெறமுடியாது. சிறிலங்கா அரசு அவைகளை இங்கு வரவிடாமல் தடுத்துள்ளது. எனவே பெறமுடியாத கடைச்சரக்குகளுக்கு ஈடாகப் பாவிக்கக்கூடிய மூலங்கள், கொடி, செடி, கற்சரக்கு இவைகள் பற்றிய பரந்த அறிவு – திறமை – எம்வைத்தியர்களுக்கு வேண்டும்.

நிறம், அமைப்பு, மணம், சுவை, நோய்தீர்க்கும் பண்பு இவைகளை வைத்து மக்கள் மருந்தின் தரத்தை உறுதிப்படுத்துவதுபோல் – மருந்துகள் செய்யப்படும் காலத்தில் அதைக்கண்டு உணர்ந்து – ஏட்டுமுறையின்படி அவை செய்யப்படுகின்றதா என்பதை அறிந்து உறுதிப்படுத்தியபின்பே மருந்துகள் பாவனைக்கு விடப்படல் வேண்டும். இம்முறை 1950 முதலே நடைமுறையிலுள்ளது – மருந்தை உறுதிப்படுத்தும் அதிகாரிகள் உள்ளூராட்சி மன்ற வைத்திய அதிகாரிகளேயாகும்.

இவை தொடர்பாக இருவரைச் சந்தித்தோம். ஒருவர் திரு. கி. சிவநேசன் அவர்கள் தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சமாசத்தின் பொது முகாமையாளர்.

மற்றவர் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும் பனை தென்னை வள அபிவிருத்தித்துறைப் பொறுப்பாளராக இருக்கும் திரு. ரி. சபாரெத்தினம் அவர்கள்.

● சித்தவைத்தியக் கூட்டுறவுச் சங்கம் நூற்று முப்பைத்தைந்துக்கும் மேலான மருந்துகளைச் செய்துள்ளதாக அறிந்தோம். இதுபற்றிய மேலதிக விளக்கம் தேவை.

● எமக்குவரும் – பல்வேறு நோய்களுக்கும் நாட்டு முறை மருந்துண்டு. அவற்றை உருவாக்கித்தரும் பொறுப்பை சித்தமருத்துவத்தில் பயிற்சிமிக்க வைத்தியர் திருமதி இராதாதேவி அவர்கள் ஏற்றுள்ளார். இம்மருந்துகள் சரியானவையென மூன்று வைத்தியக்கலாநிதிகள் உறுதிப்படுத்துகின்றனர்.

திரு. து. சண்முகராசா அவர்கள் – திரு. பூ. கைலாயநாதன் அவர்கள் – திருமதி பு. நாகேஸ்வரி ஆகியோர் பிரதேச உள்ளூராட்சி ஆணையாளரின் கீழ் இயங்கும் இலவசச் சித்த ஆயுள்வேத மருத்துவர்களாகும். இவர்களின் உறுதிப்படுத்தலைப் பெற்ற எண்ணெய் வகைகள், மாத்திரை வகைகள் – ஏனைய மருந்து வகைகள் அதிகமாக மக்கள் மத்தியில் பாவனைக்கு வருகின்றன. எது எவ்வாறாயினும், இது காலவரை எமக்குரிய மருந்துகளை நாம் கொழும்பிலிருந்தே தருவித்தோம், எதிர்பார்த்திருந்தோம், ஆனால் இப்போது எம்மிடையே ஏற்பட்டுள்ள விழிப்பு- மருந்துகளை நாமே உருவாக்குகின்றோம். வெற்றியும் கண்டுள்ளோம்.

வாதரட்சகன் குளிகை, சுவாசகுடோரி, சிவன் குளிகை கபாடமாத்திரை, மதுமேகச்சூரணம், சிவகரந்தைச்சூரணம் – சித்த சிலாமிர்தம் – அமிர்தாரிஸ்டம் எனப் பல்வேறு வகையில் மருந்து செய்யப்பட்டுள்ளது- என்கிறார் திரு. ரி. சபாரெத்தினம் அவர்கள்.

நீரிழிவு – வாதம், போசாக்கின்மை; தொற்று நோய்கள் இயல்பாகவே வரும் நோய்கள். இவைகளுக்கு உதவும் இம் மருந்துகள் சிறந்த முறையில் மக்களுக்குப் பயன்படுகின்றது. இம் மருந்துகளில் பலவற்றை உருவாக்கும் முறைமைக்கு உதவியளிக்கும் மதுசாரம் எங்களிடம் இருப்பதனால் எங்களால் கூடிய மருந்துகளை முறைப்படி செய்யமுடியும். மக்களுக்கும் அதில் நம்பிக்கை ஏற்படுகின்றது.

● மருந்துகளினால்–மதுசாரத்தை உருவாக்குபவர்கள் நன்மையடைவார்களா?

● ஆம் நிச்சயமாக-மதுசாரத்தை உற்பத்தி செய்யப் பணங்கள் தேவை எனவே பனங்கள்ளைத் தரும் தொழிலாளர்கள் தமது உற்பத்திப் பொருள் விற்பனையின் மூலம் இலாபமும் பெறுகின்றனர் – அதேவேளையில் நோய் வந்தால் இலவசமாக மருந்தையும் பெறுகின்றனர். என்கிறார் திரு. கி. சிவநேசன் அவர்கள்.

## ஓவிய வாக்கியம்



அகதி முகாமில் வசிக்கும்
குழந்தை ஒன்று சுட்ட மீனை
அலாதியாகச் சாப்பிடும்
காட்சியினை தன் 'கமெரா'
விற்குள் கொண்டு வந்தவர் கணேஸ்ராணி.

இக்காட்சிக்கான கவிதை
வரிகளை தரவேண்டியவர்கள்
சாளரம் வாசகர்களாகிய நீங்கள்.

● மருந்து உற்பத்தியில் நாம் எந்தவகையில் முன்னேறியிருக்கின்றோம்?

● சென்ற காலங்களான 1954 முதல் 1990 வரையில் இருந்த தேக்கநிலை இப்போது இல்லை. ஆனால் இன்னும் எவ்வளவோ தூரம் நாங்கள் முன்னேற வேண்டியுள்ளது. இதற்கு வைத்தியர்களின் கூட்டுமுயற்சியும் - பயன் கருதாத தன்னலமற்ற உழைப்பும், அறிவுசார்ந்த பங்களிப்பும் மிகமிகத் தேவையாகும். எல்லோரும் இணைந்து நாட்டுப்பற்றோடு இத்துறைக்கு ஊக்கம் தந்தால் நாம் நம்மிடையே ஏற்படும் நோய்களுக்கான மருந்தை உற்பத்தி செய்து- திடமான ஓர் சமுதாயமாக மாறலாம். இது திரு. ரி. சபாரெத்தினம் அவர்களுடைய கருத்து -

இவைகளை அறிந்தபின் விடைபெறுகின்றோம். மருந்துகள் உருவாக நம்மிடையே ஒற்றுமை தேவை என்ற வேண்டுதல்நெஞ்சைத் தொடுகின்றது. எமது ஒற்றுமையே - நல் உணர்வே பலம் -

மு. இ, யோ.

## சாளரம் தொடர்பாளர்கள்

குடாநாடு தவிர்ந்த, வெளிமாவட்டத்தில் உள்ள சாளரம் வாசகர்கள், குறிப்பாக மாணவர்கள் சாளரம் சம்பந்தமான தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள வசதியாக தொடர்பாளர்கள் சிலரை நாம் நியமித்துள்ளோம்.

சாளரம் குறித்த கருத்துக்கள், ஆக்கங்கள் போன்றவற்றை இவர்களூடாக வாசகர்கள் அனுப்பிவைக்கலாம். சாளரம் தொடர்ச்சியாக கிடைப்பதில் சிரமங்கள்ஏற்படின் முறையிடலாம். உங்கள் பாடசாலைகளில் சாளரம் சார்பாக ஏதும் நிகழ்ச்சிகளை நிகழ்த்த விரும்பின் அதற்கான ஏற்பாடுகளையும் இவர்கள் மூலமாக கலந்தாலோசிக்கலாம்.

சாளரம் தொடர்பாளர் விபரம்:-

| | |
|---|---|
| வவுனியா - | பா. ஜெயபாலன் (ஆசிரியர்)<br>திசா கல்விவளர்ச்சிக் கழகம்<br>இரணை இலுப்பைக்குளம். |
| வவுனியா - | இ. வரதராசன் (அதிபர்)<br>புளியங்குளம் இ. க. |
| கிளிநொச்சி - | அன்ரன் அன்பழகன் (ஆசிரியர்)<br>உருத்திரபுரம் ம.வி. |
| முல்லைத்தீவு - | மா. ராஜகுமார் (ஆசிரியர்)<br>வித்தியானந்தா கல்லூரி<br>முள்ளியவளை. |
| மணலாறு - | ந. விஜயரட்ணம் (ஆசிரியர்)<br>(மணலாறு விஜயன்)<br>செம்மலை ம. வி. |
| மன்னார் - | திரு. எஸ் டேவிட் (உபஅதிபர்)<br>முருங்கன் ம. வி. |

# விளையாட்டுச் செய்திகள்

## கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

1993 ஆம் ஆண்டுக்கான யாழ் மாவட்டப் பாடசாலைகள் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டிகள் 2. 6. 93 புதன் கிழமை அன்று பலாலி ஆசிரியர் கல்லூரி, திருநெல்வேலியில் இடம் பெற்றது.

முதன்மை விருந்தினராக திரு. ஆர். எஸ். நடராஜா அவர்களும் (அதிபர், பலாலி ஆசிரியர் கல்லூரி) சிறப்பு விருத்தினராக தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டத் தளபதி அன்பு அவர்களும் கலந்து கொண்டனர்.

ஐந்து ஆட்டங்களைக் கொண்ட இறுதிப் போட்டியில் 17 அகவைப் பிரிவில் சென் ஜோன்ஸ் கல்லூரியும், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயமும் கலந்து கொண்டன.

19 அகவைப் பிரிவில் சென் பற்றிக்ஸ் கல்லூரியும், காட்லிக் கல்லூரியும் கலந்து கொண்டன.

சென்ஜோன்ஸ் கல்லூரி 3, 0 என்ற கணக்கில் லெப் கேணல் றீகன் நினைவு வெற்றிக்கேடயத்தை வென்றது.

சென் பற்றிக்ஸ் கல்லூரி 3, 1 என்ற கணக்கில் லெப் கேணல் ஜோய் நினைவு வெற்றிக்கேடயத்தை வென்றது.

ஒவ்வொரு பிரிவிலும் 60 பாடசாலைகள் போட்டிகளில் கலந்து கொண்டனர்.

கரபந்தாட்டப் போட்டி 20 ஆண்டுகளின் பின் இந்த ஆண்டு நடை பெற்றது என்பதும் 92 ஆம் ஆண்டு

சென். ஜோன்ஸ்



இடமிருந்து வலம்.

இருப்பவர்: சிறில் ஹண்ட் ராஜ்குமார்
சண்முகலிங்கம் விமலன்
சாமுவேல் ரஜீவ் நவரட்ணம் (தலைவர்)
தனபாலன் கிறிஸ்ரி சுதர்சன் (துணைத் தலைவர்)
தேவராஜா அரவிந்தன்.

நிற்பவர்: செல்வநாதன் ரமேஷ்
க்திரேசு கிருபாகரன்
பாலசுந்தரம் சுதர்சன்
பிளொயிட் சுஜீவன் நேசராஜா
உருத்திரன் யூட் துஷியந்தன்
இரத்தினராஜா ரமணன்

சென். பற்றிக்ஸ்



இடமிருந்து வலம்.

இருப்பவர்: நல்லையா சுதேஸ்குமார்
ஸ்ரீபன் ஜெமில் ஜெகதீபன் (தலைவர்)
துரைசிங்கம் ஜசிந்தராஜ் (துணைத் தலைவர்
நடராஜா ராஜ்மோகன்

நிற்பவர்: ஜோகம் தேவநாயகம்
அன்ரன் மொறிசன் பெலஸ்கோ
பெனடிக்ற் ஜெப்றி நிரோஷன்
இம்மானுவேல் அன்றோ மீடன்

நடை முறைக்கு வந்த புதிய விளையாட்டு விதி ஒழுங்குகளுக்கு அமையவே இப்போட்டி நடைபெற்றது என்பதும் பலருக்கு தெரியாத விடயங்கள்.

அண்மைக் காலத்தில் யாழ்ப்பாண கல்வித்திணைக்களம் பல விளையாட்டுப் போட்டிகளை சிறப்பாக நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. இதில் உடற்கல்வி, உதவி கல்விப் பணிப்பாளர் திரு. த. அருணகிரிராஜாவின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## மெய்வன்மைப் போட்டி

யாழ் கல்வித் திணைக்களத்தால் யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கான மெய்வன்மைப் போட்டி யாழ் மத்தியகல்லூரித் திடலில் 8, 9-6-93 நடைபெற்றது.

முதன்மை விருந்தினராக திரு. இ. சுந்தரலிங்கமும், சிறப்பு விருந்தினராக திரு. ந. இன்பனும் (தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க பெறுப்பாளர்) கலந்து கொண்டனர்.

261 புள்ளிகள் பெற்று முதல் இடத்தை பெற்ற யாழ் கோட்டம் லெப் கேணல் பொன்னம்மான் வெற்றிக் கேடயத்தை வென்றது இரண்டாம் இடத்தை வடமராட்சிக் கோட்டம் (166 புள்ளிகள்) பெற்றது.

ஒவ்வொரு பிரிவிலும் அதிக புள்ளி பெற்றவர்களும் அவர்தம் பாடசாலைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

அகவை 15- க. சஞ்சயன் - சென்ஜோன்ஸ் கல்லூரி (15 புள்ளிகள்)

வே. ஜெகதீஸ்வரி – மந்துவில் சிறி பார்வதி (10 புள்ளிகள்)

வி. விஜயபிரபா - வேம்படி மகளிர் கல்லூரி (10 புள்ளிகள்)

அகவை 17- செ. நிரூபன் - சென்பற்றிக்ஸ் கல்லூரி (10 புள்ளிகள்)

ச. சபானந்தன் - காட்லி கல்லூரி (10 புள்ளிகள்)

இ. சிவகௌரி - புற்றளை ம. வி. (15 புள்ளிகள்)

அகவை 19- த. பிரதீபன் - காட்லி கல்லூரி (10 புள்ளிகள்)

க. மகாநந்தகுமாரி - யாழ் இந்து மகளிர் கல்லூரி (15 புள்ளிகள்)


சாளரம் நீடுழி வாழ வாழ்த்துக்கள்!
சாளரம் இருளகற்றி எங்கும் ஒளி
நிரம்ப ஊடகமாகட்டும்

பழமுதிர்சோலை

கரணவாய் தெற்கு
கரவெட்டி.

தங்கம் நிகர் நெல்மணிகளிலிருந்து
தரமான அரிசியினை தருபவர்கள்

# அம்பாள் அரிசி ஆலை

ஸ்தாபனத்தினர்

நெல்லை தரமான சுவையான அரிசியாக்குவதில்
அரிசி ஆலைகளின் பங்கு மிக முக்கியமானது.

பருத்தித்துறையில் தரமான அரிசி வகைகளைப்
பெற நாடவேண்டிய இடம்:—

# அம்பாள் அரிசி ஆலை

தும்பளை வீதி -- பருத்தித்துறை

அழுகுரல் கேட்டுக் கூடிய கூட்டத்தினர் துப்பாக்கி வெடியால் வீழ்ந்தவர்களைத் தூக்கிய போதில்; மட்டக்களப்பு மக்களிடையே நன்கு பேர்பெற்றிருந்த சட்டத்தரணி சாம் ஸ்ரீபனின் மகனாகிய கல்லூரி மாணவன் ஸ்ரீபன் ராசேந்திராவும்; பொதுவுடமைக் கொள்கைப் பற்றாளர் தோழர் வி. தங்கராசாவும் இறந்து போயினர் என்பதைத் தெரிந்து கொண்டனர்.

முற்றது. கல்முனை - களுவாஞ்சிக்குடி - கல்லாறு – சம்மாந்துறை ஆகிய பகுதிகளிலுள்ள தமிழ் முஸ்லீம் மக்களின் முழு எதிர்ப்பையும் மீறி 44 பகுதிக் குடியிருப்புக்களைக் கொண்ட இத்திட்டத்தில் 38 குடியிருப்புப் பகுதிகளில் முழுக்கவும் சிங்களவர்களை நிறைத்தும், ஏனைய குடியிருப்புக்களினூடேயும் சிங்களவர்களைப் புகுத்தியும் பெரும் சிங்களவர் குடியிருப்பு மையத்தினை ஏற்படுத்தியது சிங்கள அரசு.

# பதவிக்குவரும் அரசும் பாழ்படும் விளைநிலமும்

ஆவேச அலையில் அள்ளுண்ட மக்கள் சிலர் கொலைகாரன் புல்லுமலை றபாயலைத் துரத்தியபடி ஓடினர். மற்றோர் காயப்பட்டோரைக் காத்திடும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். துப்பாக்கி வெடியினால் ந. ஏரம்பமூர்த்தி எனும் பெயருடைய கவிஞர் எருவில் மூர்த்தி என்பார் தன் வலது கண்ணை இழந்திருந்தார். மற்றும் தம்பிமுத்து - ஆறுவயதுடைய செல்வி எஸ். கபிலமாது எஸ். அரசரெத்தினம் - வி. நடராசா- பா. ஜீவானந்தம் ஆகியோர் பலத்த காயமுற்றிருந்தனர்.



குறித்த சிலகணப் பொழுதில் நடந்தேறிய இச்சம்பவம் மட்டக்களப்பு மக்களிடையே தீயெனக் காற்றிடை பரவியதை அடுத்து - வேளையை எதிர்பார்த்திருந்த அங்குள்ள காவல்துறையினர் சுழல் துப்பாக்கிகளுடன் நகர்வலம் வரலாயினர்.

ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் கொழும்பு வாழ் தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட கொடு நெறியை விடவும் மோசமான முறையை கல்லோயாவில் குடிகொண்ட தமிழர்கள்மீது சிங்களவர்கள் கையாண்டனர்.

தமிழர் வீடுகளிலுள்ள சொத்துக்கள் சூறையாடப்பட்டன. பெண்மகளிர் மானம் பறிக்கப்பட்டது. தமிழர் கோயில்கள் உடைக்கப்பட்டன. நூற்றுக்கணக்கான தமிழ் மக்களின் உயிர்கள் இரவுபகலாகச் சிங்களக் காடையர்களால் காவு கொள்ளப்பட்டன. தம் உயிர் காத்தற்பொருட்டு அஞ்சி ஒதுங்கிய பிஞ்சுக் குழந்தைகளை கொடுவாள் கொண்டு கொன்றனர் சிங்கள வன்நெறியினர். பாதுகாக்க எவருமில்லா நிலையில் தமிழ்மக்கள் கூட்டம் கூட்டமாக மட்டக்களப்பையும்; கல்முனையையும் நோக்கி விரைந்திட்டனர்.

**பட்டிப்பளை ஆறு கல்லோயாவானது.**

1941ம் ஆண்டு டீ. எஸ். சேனநாயக்காவினால் அரசமரம் நட்டு ஆரம்பிக்கப்பட்ட இக்குடியமர்வுத் திட்டத்தினால் பட்டிப்பளை ஆறு என்ற பாரம்பரிய தமிழ்பகுதி கல்லோயாவாக சிங்கள அரசால் மாற்ற

தமிழ்மக்களுக்கு நன்மை தரும் திட்டம் என்று சொல்லிக் கொண்டு, கொரனை, களுத்துறை, கம்பகா ஆகிய இடங்களிலிருந்தும் ஆயிரமாயிரம் குடும்பங்களைக் கொண்டுவந்து, உகனை-பக்கியகலை கினியாகலை என்ற மூன்று இடங்களையுருவாக்கி நிறைத்த; குடியமர்த்தல் நிகழ்வுகளைப் பொறுக்காத தமிழ்மக்கள் தமது உள்ளத்துக் கொதிப்பைக் காட்டி அவ்வேளை அரசுக்கு முறையீடுகள் செய்தும், தமிழீழப் பகுதிக்கு வரும் சிங்கள அமைச்சர்களுக்குக் கறுப்புக் கொடிகாட்டித் தம் வெறுப்புணர்வைக் கூட்டியும் வந்தனர்.

மட்டக்களப்பு நகர் முழுவதும் சுழல் துப்பாக்கிகளோடு வீதிகளில் உலாவிய காவல் துறையினரின் துணையில்லாமலேயே வெடிப்பட்டவர்களை மருந்தகத்திற்கு கொண்டு சென்றும் - வீழ்ந்திறந்தோரின் உடல்களை இடுகாட்டிற்குக் கொண்டு செல்லுதற்கான முயல்வுகளையும் அவரவர் உறவினர் ஊடாக நகர மக்கள் தொடர்ந்த வேளையில்;

நீடித்த ஊரடங்கு உத்தரவினாலும் வன்நெறிக் கொடூரங்களினாலும் தமிழீழ நகரங்கள் துடித்துக் கொண்டிருந்ததுகேட்டு; பழந்தமிழ் ஊர்களில் ஒன்றான துறை நீலாவணை மனத்தாற் கொதித்துக் கொண்டிருந்தது.

நித்திரையில் இருக்கும் குழந்தையின் அழகுபோல் தாமரைகள் விரிந்திருக்கும் தங்கள் ஊரின் குளமும் வயலும், தாய்மை எழில் கொண்ட தமது கோயிலும் வருடத்து வைகாசி மாதம் முதல் விழிக்கும், என்பதும் அதற்கு முன்னாக வயலில் குவிந்துள்ள நெற்சூட்டை எருமைகளால் அடித்து வீட்டுக்கு நெல்லைக் கொண்டு செல்ல வேண்டுமென்ற அவசரமும் நீலாவணை உழவர் முகங்களில் மின்னின.

முன்னங்கால் ......
வெள்ளையப்பாமுகம்
நிறைந்த சீதேவியாம்
சீதேவியார் போகுமிடம்
செங்கழுநீர்பூப்பூக்கும்
கிழக்கோவெளிக்குதப்பா
கீழ்வானம் மின்னுதப்பா
பொழுதோ விடியுதப்பா
பொற்கோழி கூவுதப்பா
நிலவே சரியுதப்பா
நீலவண்டார் கூவுதப்பா

நீறும் சந்தணப் பொட்டும் வைத்திட்ட நெற்றி குங்குமத்தால் சிவப்பேறியிருக்க, நாற்பது வயது தாண்டிய அனுபவத்தில் வேலையாட்களைத் தூண்டும் வேகம் குடிகொண்டு விளையாடிட தேநீரை ஊற்றிக் கொடுத்தவாறு, வேலை செய்பவர்களை விளித்து;

''மக்காள் இன்டை மதியத்துக்குள்ள - வேலையை முடிச்சின்று ஊட்டுக்குப் போகவேணும்''. என்றபடியே மீண்டும் எருமைகளைத் தட்டி நடங்கோ சீதேவி... முன்னங்கால் வெள்ளையப்பா... குரல்கள் வயல் வெளியைக் கலகலப்பாக்கின.

இவ்வேளைகளில்,

தென்பகுதியிலிருந்து மென்மேலும் சிங்களக் காடையர்கள் பொத்துவில் வழியாகவும் வேறுள வழியாகவும் பல்வேறு வாகனங்களின் துணையோடு தமிழர் பகுதி நோக்கி விரைவர் என்ற அறிவிப்பும் காற்றுவாக்கில் கலந்து துறைநீலாவணையில் குவிந்திருந்தது. இதனாலும்; ஏலவே நாட்டில் நடக்கும் வன்முறைகளைப்பற்றித் தெரிந்து வைத்திருந்த துறைநீலாவணையினரின் இரவு வேளைகள் — விழிப்போடு நகர்ந்தன.

ஒரு கிழமையாகக் கல்லோயாவில் நடத்திய வன்நெறிகளின் ஊக்கத்தில் வேகமுற்ற சிங்கள வன்நெறியாளர்கள் கல்முனை, மட்டக்களப்பு மற்றும் ஏனைய இடங்களிலுள்ள காவல் துறையினரின் ஆதரவுடன் தமிழ நகர் எங்கும் கலந்துறைந்த போதில்,

வீம்பு கொண்டெழுந்த சில சிங்கள சிப்பாய்களுடன் காவல் துறை மேலதிகாரியும் இணைந்து தம் காவல்துறை வாகனத்தில் நகர் சுற்றுக் கென்று 12 - 6 - 1956 செவ்வாய் காலையில் துறைநீலாவணை ஊரை நோக்கினார்கள்.

ஊரைநோக்கிய வண்டியும், ஆட்களும் தமிழ் ஊர்களின் அழகைக் கிழித்துக் கொண்டு — புழுதியுடன் துறைநீலாவணையை அண்டிய வேளையில்;

ஆங்காங்கே வழி ஓரம் அமைந்திருந்த சிறு புதர்களைக் கடந்து ஓரிரு துப்பாக்கி வெடிகளின் சத்தங்கள் கேட்ட ஒரு நொடிப்பொழுதிலே—

கண் இமைக்கும் முன்னே கனலாகத் தெறித்து முழங்கின சன்னங்கள்—

குண்டடிபட்ட சிப்பாய்களின் காவல்துறை வாகனத்தை வீரமக்கள் தீயிட்டுக் கொழுத்த — உயிர்தப்பினால் போதும் என்ற நிலையில் சிங்களக் காவல் துறையினர் வந்த திசை நோக்கிப் பதறிக்கொண்டு ஓடிக் கொண்டிருந்தனர்-

(வளரும்)

—திருமலை யோகேந்திரம்



# தமிழுக்கு ஓர் ஆலயம்

தமிழ்நாட்டில் காரைக்குடியில் இந்த ஆண்டு தமிழ்த்தாய்க்கு ஓர் ஆலயம் அமைக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளது.

முத்தமிழைக் குறிக்கும் முக்கோண மேடையாக கோவிலின் அடிப்பகுதி அமைக்கப்பட்டு அதன் மீது ஐந்து பட்டையாக கருவறை எழுப்பப்பட்டுள்ளது.

கருவறையின் நடுப்பகுதியில் தமிழ்த்தாயின் சிலை வைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து கிளை விரிந்து மூன்று கட்டிடங்கள் சுற்றுக் கோவில்களாக அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் முறையே திருவள்ளுவர், கம்பர் இளங்கோ ஆகியோரது சிலை வடிவங்கள் வைக்கப்பட்டுள்ளன.

நடுவறையில் ஏழரை அடி உயரமுள்ள தமிழ்த்தாய் சிலை நான்கு கரங்களுடன் தாமரை பீடத்தில் அமர்ந்த வாறு காட்சியளிக்கின்றது. தமிழ்த்தாய்க்கு முன்புறம் அகத்தியர், தொல்காப்பியர் சிலைகளும் நிறுவப்பட்டுள்ளன.

கருவறை வாயிலில் 'வரித்தாய்', 'ஒலித்தாய்' இருபெரும் சிலைகளும் வைக்கப்பட்டு மொழிக்கு ஒலி வடிவமும், வரி வடிவமும் இன்றியமையாதவை என்பது உணர்த்தப்பட்டுள்ளது.

# கலைச்சொல் அகராதி

DECENTRALIZATION OF POWER - அதிகாரப் பரவலாக்கம் அதாவது மூலத்தீர்மானமெடுக்கும் அதிகாரம் ஓர் இடத்திலேயே இருக்கும். ஆனால் அந்த மூலத் தீர்மானத்தின் கீழ்நிர்வாக இலகுகருதி குத்தச்சாக உப அமைப்புக்களுக்கு அதிகாரத்தைப் பரவலாக்கும் முறையே இதுவாகும். மிக ஆழ்ந்த அர்த்தத்தில் பார்த்தால் மையத்தின் அதிகாரம் நிர்வாக ரீதியாக இலகுபடுத்தப்பட்டிருக்கும் ஒரு முறையே இதுவாகும். உண்மையில் இது ஒரு நிர்வாகப்பதமேயாகும். அதிகாரத்தில் அரசியல் ரீதியான மாற்றம் இதில் இருக்காது (தமிழ் மக்களின் அரசியற் பிரச்சினை பற்றிய விடயத்தில் சிங்களத் தலைவர்களும், சிங்களப் புத்திஜீவிகளும் பொதுவாக தமக்குச் சார்பான வகையில் இப்பதத்தையே பிரயோகித்து வருகிறார்கள்).

DEVOLUTION OF POWER — அதிகாரக் கைமாற்றும் அதாவது நிர்வாக ரீதியாகவன்றி அரசியல் ரீதியாக மையத்தில் இருக்கும் தீர்மானம் எடுப்பதற்கான அதிகாரம் மாநில மட்டத்திற்குக் கைமாற்றப்படுவதை இது குறிக்கின்றது. உண்மையில் இது குத்தச்சாக அன்றி தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கிடையச்சாகக் கைமாற்றப்படுவதை குறிக்கின்றது.

STRATEGY — மூலஉபாயம் அதாவது ஒரு விடயம் சம்பந்தமாக முழுமையான பார்வையின் கீழ் நீண்டகால அடிப்படையில் வகுக்கப்படும் திட்டத்திற்கான அடிப்படையுத்தி. இது ஓர் அரசியல் இராணுவப் பதம்.

TACTICS — தந்திரோபாயம் அதாவது ஒரு விடயத்தை அந்த இடத்தில், அந்த நேரத்தில் கையாள்வதற்கான தருணத்திற்கேற்ற யுத்தி. இது ஓர் அரசியல் இராணுவப் பதம்.

TECHNIC — நுணுக்கம் அதாவது அரசியல் இராணுவ அர்த்தத்தில் ஒரு விடயத்தைக் செயற்படுத்துமிடத்து மிக லாவகமாகக் கையாளும் திறனை இப்பதம் குறிக்கிறது.

—சாரணன்

## ஓவியம் வாக்கியப் போட்டி பரிசுக் கவிதை



### மிஸ்டர் கரேஜ்

அவனுக்கு
இடுப்புக்குக் கீழே
இன்னொரு இதயம்.

ஒவ்வொன்றும் செய்யு முன்னர்
அவனை நினையுங்கள்
எங்கும் செயற்கைத்தனம்
மலிந்த பின்னும்
அவனது செயற்கைக் கால்களில்
மனித இயல்.

உங்கள் தாழ்வு மனங்களையும்
முயற்சியின் முன்னான முனகல்களையும்
அவனது காலடியில்
கொண்டு போய் கொட்டுங்கள்.
இரும்புக் கால்களுக்கிடையில்
இடிபட்டுப் போகட்டும்.

வாழ்க்கையை வென்றவன் இவன்.
எங்களூர்ப் போராளிகளைப் போல..

நா. நந்தகுமார்
*146, ஸ்கந்தபுரம்*
கிளிநொச்சி.

தெறிப்பு

# சாளரம் 3-ம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது

**இராமநாதன் கல்லூரியில்**
**1993 - 5 - 21, 22ந் தேதிகளிலும்,**

**யாழ். இந்துக் கல்லூரியில்**
**1993 - 6 - 4, 5, 6ந் தேதிகளிலும்**
**நடந்த கண்காட்சி நிகழ்ச்சிகளில்**

**சாளரம் இதழும் பங்கேற்றது. நிகழ்ச்சியை பார்வையிட்டவர்கள் சாளரம் குறித்து எழுதிய குறிப்புக்கள் இவை.**

- சாளரம் மனித குலத்திற்கு உகந்த சஞ்சிகை.
  -டாக்டர் த. சிங்கராசா, தலைவர் - இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணம்.

- நாடுள்ள இப்போதைய நிலையில் மாணவர்கள் நலம் பெறும் கட்டுரைகள் வெளிவருவதை வரவேற்கின்றேன் - மேலும் சிறப்பாக அவ்வவ் துறை சார்ந்தவர்களின் கட்டுரைகள் வெளிவரும் என எதிர்பார்கின்றேன்.
  திருமதி. ஆ. சிவஞானசுந்தரம் அதிபர் யா / இராமநாதன் கல்லூரி.

- சாளரத்தை இளைஞர்கள் தொடர்ந்து வாசியுங்கள், வாசித்தவற்றை மற்றவருடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
  உ. ந. தேவகடாட்சம் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை முதல் உதவி நிகழ்ச்சி அதிகாரி.

- சாளரமில்லாதவீடு அழகுறாது - நிறைவு பெறாது- சாளரத்தில் வருபவை பெரியோருக்கு மாத்திரமல்ல சிறுவருக்கும் நன்கு பயன் தரக் கூடியது. சாளரம் இதழைக் கல்லூரிகளில் அறிமுகம் செய்துவைக்க வேண்டும் - எனது ஆதரவு என்றும் சாளரத்திற்கு உண்டு.
  ந. சிவபாதம் - புத்தொளி செல்வகம் ஆனைக் கோட்டை.

- சாளரம் இதழ் எமது தமிழீழ மண்விடுதலையைப் பற்றிய உணர்வை எம் மக்களின் மனதில் ஊட்டுகின்றது. விஞ்ஞான கலைத் துறைகளை மாணவர் மத்தியில் வெளிப்படுத்துவதாகவும் அது உள்ளதால் சாளரத்தின் பணி தொடர்ந்து ஓங்க எனது நல் வாழ்த்துக்கள்.
  – செ. ஜெயமனோகர் - உள்ளூராட்சித் திணைக் களம் யாழ்ப்பாணம்.

- சாளரத்தின் மூலம் - இன்றைய போராட்டச் சூழலில் எல்லோருக்கும் முதலுதவிச் சிகிச்சைபற்றிய கல்வியை ஊட்டினால் நன்று- செய்வீர்களா?
  -செ. அருள் அஜித் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஆரம்ப சுகாதாரத் திட்டமிடல் அதிகாரி -யாழ்ப்பாணம்.

- சாளரம் அறியாமையைப் போக்கி இன்றைய தேவையை விளக்கி நிற்கின்றது. ஓர் அருமையான சஞ்சிகை
  -பாவரசன்– நாவலர் வீதி, நல்லூர்.

- இப் போர்க்கால சூழ்நிலையிலும், இன்றைய சமூதாய நிலைக்கேற்பச் சிறுவர், வயது வந்தோர் -எல்லோருக்கும் பயன் மிகு இவ்விதழ் தொடர்ந்து மிளிர வாழ்த்துக்கள் பல.
  -செல்வி பி. ஜனா, அரியாலை.

- சாளரம் மென்மேலும் வளர்ச்சி அடையட்டும் -எனது பாராட்டுக்கள்
  -செல்வி. த. ஹம்சா. ஆண்டு 9, வேம்படி மகளிர் கல்லூரி.

- சாளரத்தில் வெளிவரும் ஆக்கங்கள், அவற்றின் கருத்துக்கள் மிகவும்வரவேற்கத் தகுந்தவை. அறியாத செய்திகளை அறிகின்றோம்.
  -நா. புஸ்பராணி, நல்லூர் — யாழ்ப்பாணம்.

- சாளரம் — எமது வரலாற்றில் இடம் பெற்ற பல வரலாற்று உண்மைகளின் ஒட்டு மொத்தமான வெளிப்பாடாக அமைகின்றது. தொடரட்டும் உங்கள் பணி.
  -செல்வி. ச. கங்கைவேணி- பல்கலைக்கழக மாணவி.

- மாணவர்களுக்கு நல்ல அறிவியற் சிந்தனைகளையும் ஒழுக்கக் கல்விகளையும் வளரச் செய்யும் வகையில் சாளரம் மேலும் வளரவேண்டுமென்று விரும்புகின்றோம்.
  –திருமதி இராமநாதன் கொக்குவில், யாழ்ப்பாணம்.

- நாட்டில் நடப்பதைக் காட்டும் கண்ணாடி, சாளரம் இதழ் வளர எனது வாழ்த்துக்கள்.
  -பா. இராதாதேவி- சித்த வைத்தியக் கூட்டுறவுச் சங்கம் சித்தன்கேணி.

- சாளரம் மக்களுக்கு அறிவோடு உதவுவதில் சிறந்து விளங்குகிறது.
  -சி. பொன்னம்பலம் ஆசிரியர் — யாழ்பாடி வீதி, யாழ்ப்பாணம்.

- சாளரம் மாணவர் சமுதாயத்திற்குப் பயன் தருவது அது அவர்களைச் சென்றடையும் முயற்சி தேவையானது.
  -க. கனகலிங்கம் ஆசிரியர் - 34 யாழ்வீதி, யாழ்ப்பாணம்.

- சாளரத்தில் வரும் ஆக்கங்கள் மனதைத் தொடுகிறது - மாணவ மாணவியரின் அறிவுப் பசியைப் போக்குகின்றது. சாளரம் தொடர்ந்து வளர வாழ்த்துகின்றேன்.
  -செல்வி - தே. பிரியதர்ஷினி ஆண்டு- 12 யாழ்/ இராமநாதன் கல்லூரி.

தொகுப்பு மு. இ. யோ.

யாழ்ப்பாணம்

# வடமராட்சி கிழக்கில் வளராத கல்வி நிலை

—திருமலை யோகேந்திரம்

(கடந்த இதழ் தொடர்ச்சி)

நிலவின் ஒளியில் வடமராட்சிக் கிழக்கின் எழிலை அனுபவித்தபடியே நாகர் கோயில் பாடசாலைகள் பற்றிக்கூறி நாளையே இவற்றைச் சந்திப்போம் என்றார் ஏ. டி. அரியரஞ்சன்.

உறங்கி விழித்தோம்.

தேன் நிறைந்தது பூவிதழ் - இனிமை தந்தன வண்டுகள் - கதிரொளி வானில் விரிந்தது - காலை மலர்ந்து வளர்ந்தது.

**நாகர்கோவில் மகாவித்தியாலயம்**

மோப்பக் குழைந்த அனிச்சம் போல் முகம் வாடிய படி இருந்த மாணவர்கள், எங்களைக் கண்டதும், அவர்களுடன் நகை சிந்தும் முகத்தோடு எம்மை வரவேற்றார் கல்விக்கழக ஆசிரியர் நா. பத்மநாதன். திருகோணமலை, முல்லைத்தீவு, ஆனையிறவு, மயிலிட்டி, பலாலி, காங்கேசன்துறை, வெற்றிலைக்கேணி ஆகிய இடத்திருந்தோருடன் இவ்விடத்து மாணவருமாகப் படிக்கின்ற இப்பாடசாலை 1956ல் தோற்றுவிக்கப்பட்டது. அவ்வேளை நற்பெறுபேறுகளைத் தக்கவைத்திட்ட இக்கல்வியகம் இப்போது இருளை நோக்கிய எதிர்காலத்தில் நிற்பதற்குக் காரணமே பெற்றோர் - அதிபர் - ஒத்திசைவின்மை என்பதைப் பலரும் கூறினர் - இதை இவரும் மறுக்கவில்லை.

**நாகர்கோவில் அமெரிக்கமிஷன் தமிழ் கலவன் பாடசாலை**

ஆண்டு ஒன்பது வரையிலான இப்பாடசாலையில் கல்விபெறும் 570 மாணவர்களுள் 300க்கும் மேலானவர்கள் இடம் பெயர்ந்த பிள்ளைகள். பெற்றோருடைய ஒத்திசைவோடு இயங்கும் இங்குள்ள நூலகம் இதன் எழுச்சிக்குச் சான்றாகின்றது.

**செல்வன் ச. தயாபரன் - ஆண்டு - 9**

14 - 7 - 1991 அன்று வெற்றிலைக்கேணியில் இராணுவம் தரை இறங்கியபோது தந்தையை வன்செயலில் இழந்தார். பேசவியலாத நோயில் தாய். இந்நிலையிலும் கல்வியைத் தொடர்கிறார். கொத்தணி மட்டத்தில் பண்ணிசைப் போட்டியில் முதலாம் இடத்தையும், வடமராட்சிக் கொத்தணி பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டியில் முதலிடத்தையும், அதேபோட்டியில் கோட்டமட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்ற உடற்பயிற்சி அணியின் தலைவர் இவர்.

"எனது பாடசாலை ஏனைய பாடசாலைகளை விட முன்னணியில் திகழ வேண்டும் என்ற அவாவில்



போட்டியில் பங்கு கொள்கின்றேன்"- என்றார். இவருடன் செல்வி ம. தர்சினி.

"பாடசாலை நூலகத்திற்கு அறிவியல் நூல்கள் தேவை என்றும் இப்பாடசாலையில் அறிவியல் கருத்து நிகழ்வுகளைச் சாளரம் இதழும் ஏனையவர்களும் செய்ய முன்வரவேண்டும்" - என்கிறார்.

பெற்றோர்களைச் சந்தித்தோம்.

க. அழகுராசா. (மயிலிட்டி) "பிள்ளைகளின் கல்வி வளர எம்மால் முடிந்தவரை உதவுவோம் - எங்கள் முயல்வுகளுக்கு இப்பிரதேசப் பொதுநல அமைப்புக்கள் ஊக்கம் தரும் என்பது எங்கள் நம்பிக்கை."

சு. அருமைலிங்கம் (ஆளியவளை) "கடற்தொழிலுக்கான கருவிகளை இழந்து விறகு வெட்டி வாழ்கின்றோம் - பிள்ளைகளின் கல்வி அழியலாகாது -

திருமதி ஜெ. சுந்தரவதனி (உடுத்துறை) "கணவனைக் கடலில் பறிகொடுத்தேனாயினும் குழந்தைகளின் கல்வியைச் சிதைக்கவில்லை. தந்தையில்லா இடைவெளியைக் காட்டாது கல்விக்கெனக் கேட்பவற்றைப் பிள்ளைகளுக்குக் கொடுக்கின்றேன்.

இவர்களுடன் இணைந்திருந்த திருமதி. வெ. மனோறஞ்சிதம். (திருக்கோணமலை நாகர்கோவிலைச் சேர்ந்த திருமதிகள் - ச. தவமணிதேவி இ. தவமணிதேவி ஆகியோர் மேற்கூறிய கருத்துக்களை ஏற்றுக் கொண்டு - வழியனுப்பக் கரங்குவித்தனர்.

நாமும் நன்றி கூறியவாறு எமது பயணத்தைத் தொடர்ந்தோம்.

(அடுத்த இதழில் முடியும்)

# பயம்-பதற்றம்

நரம்புத்தளர்ச்சி சம்பந்தப்பட்ட நோய்களிலே மிகவும் சர்வ சாதாரணமாக ஏற்படும் நோய் இது. பயம், பதற்றம் என்பது எல்லாவித நோய்களிலும் ஒரு அறிகுறியாகத் தோன்றினாலும் சில சமயம் அதுவே ஒரு தனிநோயாக மனிதனை ஆக்கிரமித்துக் கொள்கிறது. அளவிற்கதிகமான பயமும், பதற்றமும், மன அழுத்தமும் இதனால் ஏற்படுகின்றன. இவை மணிக்கணக்கில் தொடர்ந்து இருந்து நோயாளியை எதிலும் ஈடுபட முடியாவண்ணம் முடக்கி விடுகின்றன. பெரும்பாலும் சுற்றுப்புற சூழ்நிலையின் தூண்டுதல் தான் நோயின் தன்மையை அதிகப்படுத்துகிறது.

## நோயின் அறிகுறிகள்

இந்நோயினால் மனதிலும், உடலிலும் பலவித தாங்க இயலாத துன்ப உணர்வுகள் உண்டாகின்றன. தொடர்ச்சியான பயமும், பதற்றமும், மன அழுத்தமும், கவலையும் மனதில் தோன்றும். மனதை எதிலும் நிலை நிறுத்த முடியாமல் பிணியாளர் தவிப்பார், தினசரி வாழ்வில் செய்ய வேண்டிய காரியங்கள் சிலவற்றை மறந்து விடுதலும், கவனக் குறைவும் இவர்களிடம் ஏற்படும். ஒரு காரியத்தை முடிக்காமல் மற்றொரு காரியத்தில் ஈடுபடுதலும் சிறுவிடயத்தில் கூட எரிச்சல் அடைவதும் அல்லது கவலையில் ஆழ்ந்து விடுவதும் இவர்களிடம் சாதாரணமாகக் காணப்படும். மனப்புழுக்கத்தால் எளிதில் உடல்தளர்ச்சியடைவர். தூக்கமின்மையால் இவர்கள் துன்புறுவர். அப்படியே தூங்கினாலும் துன்பம் நிறைந்த கனவுகளால் அது தடைப்படும்.

உடலளவில் தானியங்கும் நரம்பு மண்டலம் (AUTONOMIC NERVOUS SYSTEM) தூண்டப்பட்டு அது அதிக அளவில் வேலை செய்வதால் நெஞ்சு படபடப்பு, நெஞ்சுவலி, அதிவேகமான இருதயத்துடிப்பு, மூச்சுத்திணறல், தலைச்சுற்றல், பசியின்மை, வயிற்றுப் பொருமல், கலக்கல், குமட்டல், வயிற்றுவீக்கம், மலச்சிக்கல், பேதி அடிக்கடி, சிறுநீர் கழித்தல், தசைநார்களில் துடிப்பு, கைகால்களில் தளர்ச்சி, நடுக்கம், வலி, கண்பார்வை மங்கல், காதில் இரைச்சல், வியர்த்துக் கொட்டுதல் போன்ற பல வகை அறிகுறிகளால் துன்புறுவர். ஆனால், உடல் பரிசோதனையில் எந்த விதமான கோளாறும் காணமுடியாது.

இந்நோய் பாரம்பரியத்தாலும் உண்டாகலாம். எனினும் இளம் வயதில் ஏற்பட்ட கசப்பான அனுபவத்தின் தொடர்ச்சியே இதன் முக்கியகாரணமாகும். இத்தகைய பயம், பதற்றத்திற்கு அவர்களால் காரணம் சரிவரக்கூறமுடியாது. தேர்வு எழுதச்செல்லும் மாணவனுக்கும் தனது திறமைக்கு மீறிய வேலையில் ஈடுபடச் செல்லும் தொழிலாளிக்கும் நிச்சயம் பயம், பதற்றம் ஏற்படத்தான் செய்யும். இது அளவோடு தான் இருக்கும். ஆனால் பயம் — பதற்றநோய் அப்படியல்ல. இவை அளவிற்கதிகமாகவே இருக்கும். இது முழுக்க முழுக்க ஆழ்மனதிலிருந்தே தோன்றுகின்றது.

இந் நோய்க்கு ஆட்படுவோர் தங்களது ஆற்றலுக்கு மீறிய இலட்சியங்களைக் கொண்டிருப்பர். அதே சமயம் மனச்சாட்சிக்கு பயந்தும் நடப்பர். நிறைய செயலாற்ற வேண்டும் என்ற துடிப்புடன் இருப்பார்கள். சில சமயம் எதிர்பாராத விதமாக இவர்கள் எடுத்த முயற்சியில் சிறு தோல்வி கண்டாலும் நிலைகலங்கி விடுவர். தினசரி அலுவல்களைக்கூட நிறைவேற்ற முடியாமல் கஷ்டப்படுவர். சில சிரமமான காரியங்கள் வந்துவிட்டால் அதை இவர்களால் சமாளிக்க முடியாது. இவர்களின் இளமைக்காலத்தை எடுத்து ஆராய்ந்தால் பெரும்பாலும் பாதுகாப்பற்ற நிலையிலும் (INSECURITY) தாழ்வு மனப்பான்மையோடும், எதிலும் தோல்விகண்டு விடுவோம் என்ற அச்சம் கொண்ட நிலையிலும் இவர்கள் வளர்ந்திருப்பார்கள். குடும்பவாழ்வில் இன்பம் கிடைக்காதபோது, தளர்ச்சி, சிடுசிடுப்பு, கவலை போன்றவற்றிற்கு ஆளாகித் துன்புறுவர். சிலர் மற்றவர்களின் அன்பையும், பரிவையும் எதிர்ப்பர். சிறுவயதில் பெற்றோரின் அன்பின்மையும் நிராகரிப்பும் இதற்கு முக்கியகாரணம் ஆகும். உணர்ச்சியளவில் முதிர்ச்சி பெறாது இவர்கள் இருப்பதால் பிற்காலத்தில் வாழ்க்கையின் சிரமங்களை எதிர்நோக்கி ஈடுகொடுக்க முடிவதில்லை. எனவே இத்தகைய நரம்புத் தளர்ச்சி நோய்க்கு ஆளாகின்றனர்.

## சிகிச்சை முறைகள்

இந்நோய்க்கு மனவழி மருத்துவம், மனோவசிய மருத்துவம் (HYPNOTHERAPY) நடத்தை மாற்ற மருத்துவம் (BEHAVIOUR THERAPY) முதலியன பலன் தருகின்றன. இந் நோய்க்குத்தகுந்த மருந்துகளும் உபயோகத்தில் இருக்கின்றன. இவை நோயாளியின் பயம் பதற்ற நிலையை குறைக்க பெரிதும் உதவுகின்றன. இம்மருந்துகள் நோயின் அறிகுறிகளை மட்டுப்படுத்தி மருத்துவர் நோயாளி உறவைப்பலப்படுத்தி மேற்கூறிய மனவழி மருத்துவம் முதலியவற்றிற்கு அடி கோலுகிறது.

ஆதாரம் - மனநோயும்
இன்றைய மருத்துவமும்.

முதற் தரமான மனிதர்கள் கருத்துக்களைப் பேசி விவாதிக்கிறார்கள். சாதாரண மனிதர்கள் நிகழ்ச்சிகளைப் பேசி விவாதிக்கிறார்கள். மட்டமானமனிதர்கள் மட்டும் தனி நபர்களைப் பேசி விவாதிக்கிறார்கள்.

- சீனப் பழமொழி

● உளவியல்

# இளம்பிள்ளைகளின் சுவை உணர்ச்சிகளை விழிப்புறச் செய்யும் கல்வி முயற்சி

பிரெஞ்சுச் சிறுவர்கள் 1990ம் வருடத்திலிருந்து ஒருவித புதிய அனுபவத்திற்கு உட்பட்டு வருகிறார்கள். காரணம் அவர்களின் சுவை உணர்ச்சிகளை வளர்க்கக் கூடிய வகையில் அந்நாட்டு தொடக்கபாடசாலைகளில் 'சுவைத்தல் வகுப்புகள்' நடாத்தப்பட்டு வருதலேயாகும்.

இதன்படி 9-11 வயதிற்குட்பட்டோருக்கு ஒரு குறுங்கால திட்ட அடிப்படையில் அவர்கள் உணவின் வெவ்வேறு சுவைகளைக் கண்டறிய, உணவு தொடர்பாக முறையான அறிவியல் பார்வையொன்றை வளர்க்க, தமக்குத் தேவையான நிறையுணவைத் தயாரிக்க பயிற்றுவிக்கப்படுகிறார்கள்.

சுவை தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு அதனை வளர்க்கும் பிரெஞ்சு நிறுவனத்தின் தலைவர் தெரிவிக்கையில் "சிறார்கள் தமது சுவை உணர்ச்சிகளை வெறுமனே ஐஸ்கிறீம்களிலும், கிளர்ச்சியூட்டும் பல்வேறு மென்பானங்களிலும், வறட்டிய இறச்சி கொண்டு தயாரிக்கப்படும் சுவையற்ற தின்பண்டங்களிலும் இழக்க முன்னர் அவர்களின் சுவை உணர்ச்சிகளை விழிப்புறச்செய்ய வேண்டும்" என்கிறார்.

தொடக்கத்தில் ஒவ்வொன்றும் ஒன்றரை மணி நேரம் கொண்ட பத்து வகுப்புக்கள் நடத்தப்படுகிறது.

முதல் வகுப்பில் ஐந்து புலன்களைப் பற்றியும், இரண்டாம் வகுப்பில் நான்கு முக்கியமான சுவைகளான இனிப்பு, உவர்ப்பு புளிப்பு, கசப்பைப் பற்றியும், மூன்றாம் வகுப்பில் ஒரு உணவைத் திட்டமிட்டு, திட்டமிடுவதோடு சேர்ந்து தயாரித்து, உணவு வகைகளில் மணங்களுக்கு இடையே உள்ள தொடர்புகள் பற்றியும், நான்காம் வகுப்பில் அவைகளின் தன்மை பற்றியும் (உ+ம் உப்புக்கு மணமில்லை) ஐந்தாம் வகுப்பில் பார்வையால் அறிவது பற்றியும், ஆறாவது வகுப்பில் தொடுகை மூலம் அவற்றின் தன்மைகளான வன்மை, மென்மை போன்றவற்றை இனங்காணல் பற்றியும், ஏழாவது வகுப்பில் வாசனைத் திரவியங்கள் பற்றியும் எட்டாவது வகுப்பில் பிரெஞ்சு பிரதேச உணவு வகைகளையும், பல்வேறு உணவுப்பொருட்கள் பற்றியும், ஒன்பதாவது வகுப்பு மீட்டல் வகுப்பாகவும், பத்தாவது வகுப்பு உணவு விடுதிக்கு ஒன்றுக்குச்சென்று கண்காணிப்பதாயும் அமையும்.

இத்திட்டமானது பலராலும் விரும்பி வரவேற்கப்படுகிறது. இந்த நேர்த்தியான திட்டத்தை நடைமுறைப்படுத்திய மாணவரிடையே ஏற்பட்ட விளைவுகள் குறிப்பிடத்தக்கவையாக அமைந்துள்ளன.

தங்களது பெற்றோரே மூக்கின்மேல் விரலை வைக்கத்தக்க வகையில் முன்னர் தாங்கள் வெறுத்த உணவு வகைகளை இப்போது விரும்பி உண்கின்றனர்.

காலநிலையை, அதற்கும் விவசாய உற்பத்திப் பொருட்களுக்குமிடையிலான தொடர்பு போன்ற பல வகைப்பட்ட புவியியல், வரலாற்றுப் பின்னணிகளையும், மாணவர்கள் வெகு இலகுவாக கற்கமுடிந்துள்ளது. பல்வகைப்பட்ட நிறங்கள், உணவுப்பொருட்கள் என பலதரப்பட்ட புதிய சொற்களை அவர்கள் பழகி தமது சொல்லாற்றலை வளர்க்கிறார்கள். இவற்றை விட இலக்கிய ஈடுபாடும் ஏற்படுத்தப் படுகிறது. மேலும் உடலமைப்பு, இயற்கை அறிவியல் பற்றியும் போதிய விளக்கங்களைப் பெறுகின்றனர்.

இப்படியாக இச்சுவையுணர்ச்சிகளை விழிப்புறச் செய்யும் பட்டறைகளில் கலந்துகொள்வோர் பிரெஞ்சில் 1990ல் 6,000 பேராகவும் பின் அடுத்த வருடத்தில் 10,000 பேருக்கு மேலாகவும் அதிகரித்துள்ளனர். இங்கு முக்கியமானது என்னவென்றால், இவர்கள் இப்பட்டறைகள் மூலம் இருப்பதைப் பங்கிட, கூடிமகிழ்ந்து இருக்க வேறுபாடுகளைக் கண்டறிய இன்னும் பலவற்றைக் கற்றுக்கொண்டார்கள். சுருக்கமாகக் கூறின் இவர்கள் சமூகத்தில் தம்மை முன்னேற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

---

இந்தியாவில் 14 பிராந்திய மொழிகளில் நிர்வாகம் நடத்த வேண்டிய தேவை காரணமாக கணினிகள் மூலம் நிர்வாக சேவைகளை பெற்றுக்கொள்ளுதல் தொடர்பாக ஆய்வுகள் செய்யப்பட்டன. C—DAC என்ற நிறுவனத்தின் வாயிலாக(Center For Development of Advance Computer) ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் செயலாற்றக் கூடிய 'இயிசுடு' (Gist) என்ற முறை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலும் ஆங்கிலத்துடன், சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் எல்லா நிர்வாக, முகாமைத்துவ வங்கித்துறை போன்றவற்றில் கணினியின் சேவையை பெற்றுக் கொள்ளும் முறையொன்றை மெட்ரோ பொலிடன் குழு நிறுவனங்கள் அறிமுகப்படுத்தியுள்ளன.

பாதுகாப்பான சேவை

அன்னம் ரான்ஸ்போட்ஸ் சேவிஸ்

நம்பிக்கை - உத்தரவாதம் - பாதுகாப்பு

இம்முறையும் எமது சேவையில்
நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்

(தேங்காய் மொத்த, சில்லறை விற்பனையாளர்)

அன்னம் ரான்ஸ்போட்ஸ் சேவிஸ்

சந்தையடி - சங்கானை.

# விவேகம் மிகுந்த பிள்ளைகளும் வித்தியாசமான பெற்றோரும்

சாளரம் அலுவலகத்திற்கு சாவகச்சேரியிலிருந்து ஒருவர் வந்தார். சாளரம் முதலாம் ஆண்டு இதழ்களின் தொகுப்பு வெளியாகியுள்ளதாக அறிந்ததாகவும் சாவகச்சேரி புத்தகசாலைகளில் பெற முடியவில்லை எனவும் அவர் கூறினார்.

பின், ஒரு தொகுப்பினை எம்மிடம் பணம் செலுத்தி பெற்றுக் கொண்டார். சாளரத்தை தான் தொடர்ந்து வாங்குவதாகவும் தனது மகன் அதை விரும்பிப் படிப்பதாகவும் அவர் சொன்னார். உள்ளூரில் வெளியாகும் அனைத்து சஞ்சிகைகளையும் வாங்கிப்படிக்கும் பழக்கமுள்ளவர் என்பதை அவர் உரையாடியதிலிருந்து நான் அறிந்து கொண்டேன்.

அதன் பின்பு, யாழ்ப்பாணம் வரும்போதெல்லாம் எமது அலுவலகத்திற்கும் அவர் வருவார். சாளரம் குறித்த கருத்துக்களை அடிக்கடி கூறுவார்.

அவர் கைகளில் நிறைய சஞ்சிகைகள் புத்தகங்கள் என்பன இருக்கும். உள்ளூர் சஞ்சிகைகள், புத்தகங்களோடு தமிழகத்திலிருந்து வெளியாகும் சிறுவர்களுக்கான துளிர், கோகுலம்போன்ற சஞ்சிகைகள் சித்திரக்கதைப் புத்தகங்கள் (கொமிக்ஸ்)கூட அவர்கைகளிலிருக்கும். வேறுஎன்ன அறிவியல் சஞ்சிகைகள் புதிதாக வந்துள்ளன என எம்மிடம் விசாரித்து அறிந்துகொள்வதில்மிக ஆர்வமாக இருப்பார்.

அவருக்கு சுமார் நாற்பத்தைந்து வயதுதானிருக்கும். பெயர் விவேகானந்தன்.

“உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்? எந்தெந்த வகுப்புகளில் படிக்கிறார்கள்?” ஒருநாள் அவரிடம் விசாரித்தேன்.

“இரண்டுபேர். மூத்த மகன் பெயர் கோகுலன் நான்காம் ஆண்டில் படிக்கிறான். அவனுக்குத்தான் இந்த புத்தகங்களையெல்லாம் வாங்கிச்செல்கிறேன். இரண்டாவது மகள், பெயர் ஜீவதா ஆண்டு ஒன்றில் படிக்கிறாள்.”

எனக்குச்சற்று வியப்பாக இருந்தது. நான்காம் ஆண்டு படிக்கும் தனது மகனுக்கு இவ்வளவு நூல்களை வாங்கி வாசிக்கக் கொடுப்பதற்காகமட்டுமல்ல, பாடப்புத்தகங்களைத் தவிர்ந்த ஏனையவற்றைப்



படிப்பதால் பாடசாலைக் கல்வி பாதிக்கப்படும் என்ற கருத்தினையுடைய பெற்றோர் மத்தியில் இவரின் செயற்பாடு வித்தியாசமானதாக இருந்து. பிள்ளைகள் தாமாகவே விரும்பி எப்போதாவது வேறு நூல்களை வாசித்தால் “இதைவிட்டுவிட்டு பள்ளிக்கூட புத்தகத்தை எடுத்துப்படி” என்று கூறி அவர்களின் ஆர்வத்தைத் தடுக்கும் பெற்றோர்களைத் தான் நாம் அதிகம் பார்த்திருக்கிறோம். இது பற்றி அவரிடமே கேட்டேன்.

“வேறு நூல்களை வாசித்தால் பாடசாலைக் கல்வியில் முனைப்புச் செலுத்த முடியாமல் போய்விடும் என்று சில பெற்றோர் கருதுகின்றனரே...?”

“அது தவறான கருத்து. இளம் சந்ததியினர் பொது அறிவு பெற்றவர்களாக வளரவேண்டும். அதனால் இவ்வாறான நூல்களை வாசிக்கத்தான் வேண்டும்”.

“உங்கள் மகன் பாடசாலைக் கல்வியில் ஆர்வமுள்ளவனாக இருக்கின்றானா?”

“ஓம், ஒவ்வொருமுறை பரீட்சைகளின் போதும் முதலாம் பிள்ளையாகவே தேறி வருகிறான்.

அதேவேளை நான் வாங்கிக் கொடுக்கும் நூல்களையும் மிக ஆர்வத்துடன் வாசித்து முடித்து விடுவான். வாசிக்கும் விடயங்கள் ஒருமுறை வாசித்த வுடனேயே அவன் மனதில் படிந்து விடுகின்றன. பின்பு இரவில் அவற்றைப் பற்றியெல்லாம் என்னிடம் ஒப்புவித்து கேள்விகளும் கேட்டுக் கொண்டிருப்பான்” கூறிவிட்டுச் சிரித்தார்.

சுமார் ஒரு மாதத்திற்குப் பின்னர் ஒரு நாள் அவர் வந்தார். முகத்தில் மகிழ்ச்சி ததும்பியது.

அன்னை பூபதிநினைவாக நாடாத்தப்பட்ட பொது அறிவுப் பரீட்சையில் தனது மகன் தோற்றி அதிகபுள்ளிகள் பெற்று, தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களிடமிருந்து ஐயாயிரம் ரூபா சிறப்புப் பரிசு பெற்றுள்ளான் என்ற விடயத்தை என்னிடம் கூறினார்.

கோகுலன் என்ற மாணவன் தலைவரிடமிருந்து சிறப்புப்பரிசு பெற்ற செய்தியினை பத்திரிகைகளில்

படித்தேன். ஆனால் இந்தக் கோகுலன் தான் அவன் என்பதை நான் நினைத்துப்பார்க்கவில்லை. ஏனெனில், ஆறாம் ஆண்டிற்கு மேற்பட்டோருக்கான பரீட்சை அது. நான்காம் ஆண்டு மாணவன் எவ்வாறு பங்குபற்ற முடிந்தது என்ற கேள்வி என்னுள் எழுந்தது.

கோகுலன் இந்தப் பரீட்சையில் தான் கட்டாயம் பங்கு கொள்ள வேண்டும் என ஆர்வத்துடன் அடம்பிடிக்க – நான்காம் ஆண்டு மாணவன் என்பதால் அனுமதிக்க முடியாது என கொத்தணி அதிபர் மறுக்க - இது ஆறாம் ஆண்டுக்கு மேற்பட்டோருக்கான பரீட்சை, நான்காம் ஆண்டு மாணவன் பங்கு கொண்டு எழுதுவது கடினம் என அறிவுரை கூறி, இது சம்பந்தப்பட்ட இயக்க பொறுப்பாளர் பின்பு அனுமதி வழங்க- பரீட்சை எழுதி பரிசும் பெற்ற கதையை சுருக்கமாக சொல்லி முடித்தார், கோகுலனின் அப்பா.

கோகுலனைச் சந்தித்து சாளரத்தில் எழுத வேண்டும் என்ற எனது விருப்பத்தை அப்போது அவரிடம் தெரிவித்தேன். நான்கேட்டதற்கிணங்க ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை சாளரம் அலுவலகத்திற்கு கோகுலனை அழைத்து வந்தார்.

சிறிய மெலிந்த உருவம். ஆனால், சுறுசுறுப்பானவனாக இருந்த கோகுலனுடன் அவனது தங்கை ஜீவிதாவும் வந்திருந்தாள். கோகுலனைப்பற்றி அவனது அப்பா அதிகம் என்னிடம் சொல்லியிருந்த போதும் கோகுலனிடமிருந்து சில பதில்களைப் பெறுவதற்காக சிறு 'நேர்காணல்' ஒன்றை ஆரம்பித்தேன்.

"கோகுலன் எந்தப்பாடசாலையில் படிக்கிறீர்கள்? எந்தெந்தப் பாடங்களில் உங்களுக்கு விருப்பமதிகம் ?"

"சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தில் படிக்கிறேன். கணிதம், தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் அதிகம் விருப்பம்."

"அப்பா வாங்கிக்கொடுக்கும் எல்லா நூல்களையும் வாசிப்பீர்களா?

"ஓ... எல்லாப்புத்தகங்களையும் வாசித்து முடித்துவிடுவேன்."

"எந்த நேரங்களில் இவற்றை வாசிப்பீர்கள்?"

"பாடசாலைவிட்டு வந்து சாப்பிட்டவுடன் இவற்றை வாசிப்பேன். பின்னேரங்களிலும் வாசிப்பேன். இரவில் பாடப்புத்தகங்களை படிப்பேன்."

"இல்லை, இல்லை, பின்நேரத்தில் விளையாடுறவர்" கோகுலனின் தங்கை குறுக்கிட்டு கூறினாள்.

கோகுலனைப் பார்த்து சிரித்துக் கொண்டே அவள் கூறினாள்

"என்ன விளையாட்டில் உங்களுக்கு ஆர்வம்?" கோகுலனிடம் நான் கேட்டேன்.

"கரம், செஸ், பெட்மின்டன்"

"வேறு எந்தெந்தப் போட்டிகளில் பங்கு பற்றியுள்ளீர்கள்."

"யாழ் இந்து 'லியோ கிளப்' நடாத்திய பொது அறிவுப் போட்டி, பாடசாலை மட்டத்தில் 'றொட்டரெக்ட் கிளப்' நடாத்திய பொது அறிவுப் போட்டி ஆகியவற்றில் பங்கு பற்றியுள்ளேன். கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையம் நடாத்திய பொது அறிவுப்போட்டியில் அதிக புள்ளிகளை எடுத்தேன், பாடசாலை ஒட்டப்போட்டிகளில் பரிசு பெற்றுள்ளேன். அத்துடன் தமிழ்த்தினவிழா பேச்சுப் போட்டிகளிலும் கலந்துகொண்டு பரிசுகள் பெற்றுள்ளேன்."

இடையில் கோகுலனின் பாடசாலை அதிபர் செல்வி கிருபா வீரசிங்கம் அவர்களைப்பற்றி கோகுலனின் அப்பா குறிப்பிட்டார். இவரின் ஊக்குவிப்பு பாடசாலையில் குறிப்பிடத்தக்கது எனக் கூறினார். இவரின் பாடசாலையில் ஒவ்வொரு தவணை முடிந்ததும் பொது அறிவுப் போட்டிகள் நடாத்தப்படுவதாகவும், A/L வரை நடாத்தப்படும் இப்பரீட்சையில் கோகுலனும் கலந்து கொண்டு 92ம் ஆண்டு முதலாமிடமும் அடுத்த தவணையில் இரண்டாமிடமும் பெற்றதை அவர் குறிப்பிட்டார்.

நாம் உரையாடிக் கொண்டிருக்கையில் மேசையிலிருந்த 'ஈழநாதம்' பத்திரிகையை எடுத்துப் பார்த்துக்கொண்டிருந்தாள் கோகுலனின் தங்கை ஜீவிதா.

"ஜீவிதாவுக்கு பத்திரிகை வாசிக்கத் தெரியுமா?" என்றேன்.

"ஓம்... தெரியும்"

"எங்கே வாசியுங்கோ பாப்பம்"

"கொழும்பில் பதற்றம். இனக் கலவரம் தோன்றும் அபாயம்"

உண்மையிலேயே பிழைவிடாமல் வாசித்துக் காட்டினாள் அந்த முதலாம் ஆண்டு படிக்கும் ஆறு வயது குழந்தை!

வியப்புடன் கேட்டேன்.

"வேறென்ன தெரியும் ஜீவிதாவுக்கு?"

"பாடத் தெரியும்"

கதிரையில் கால்களை மடக்கி உட்கார்ந்து கைகளில் தாளம் போட்டவாறு சங்கீதம் ஒன்றை இசைத்துக்காட்டினாள் ஜீவிதா.

அம்மா நாட்டிய ஆசிரியை என்பதை கோகுலனின் அப்பா குறிப்பிட்டார்.

நேர்காணல் முடிய, கோகுலனும் ஜீவிதாவும் எம்மிடம் விடை பெற்று அப்பாவின் ஸ்கூட்டரில் ஏறி 'டட்டா' காட்டியவாறு புறப்பட்டனர்.

சிறுவயதிலேயே தங்களது திறமைகளை வெளிப்படுத்தி வளர்ந்து வரும் கோகுலனும், ஜீவிதாவும்; சராசரி பெற்றோரிலிருந்து விலகி வித்தியாசமானவர்களாக- தெளிவுடன் தங்களது பிள்ளைகளுக்கு அறிவூட்டிவரும் அவர்களது பெற்றோரும் ஏனையோருக்கு முன்மாதிரியானவர்களாகின்றனர்.


ஆற்றல் மிகு எதிர்கால சந்ததி குறித்த நம்பிக்கை ஒளிக்கீற்றொன்று மனதில் பளிச்சிடுகின்றது.

— விவேக்

# சிக்கனம் காக்க இரட்டைச் சூட்டடுப்பு

**நா**கரீகம் வளர வளர எமது அன்றாடத் தேவைகளும் பன்மடங்கு அதிகரித்த வண்ணமே இருக்கின்றன. அதிகரித்து வரும் தேவைகளில் விறகுத் தேவையானது முக்கிய இடத்தைப் பெறுகின்றது, யுத்தம் ஆரம்பித்தற்கு முன்னர் 80 சதவீதமான மக்கள் தமது சமையல் தேவையை விறகினைப் பயன்படுத்தியே பூர்த்தி செய்து வந்த அதே வேளை 20 சதவீதமான மக்கள் ஏனைய எரிபொருட்களையே (மண்ணெண்ணெய், சமையல் வாயு, மின்சாரம், போன்றன) தமது சமையல் தேவைக்கு பயன்படுத்தி வந்தனர்.

தற்போது நிலவும் யுத்த சூழ்நிலையாலும் பொருளாதாரத் தடையாலும் 100சதவீதமான மக்களும் தமது அன்றாட சமையல் தேவையை பூர்த்தி செய்ய முழுமையாக விறகிலேயே தங்கியுள்ளனர். முன்னர் வன்னிக் காடுகள் பூர்த்தி செய்து வந்த விறகுத் தேவையினை யாழ் குடாநாடே தற்போது பூர்த்தி செய்துவருகின்றது.



தற்போது இங்குள்ள அனேகமான மக்கள் விறகினை விலை கொடுத்து வாங்கியே சமையல் தேவையைப் பூர்த்தியாக்க வேண்டிய நிலையிலுள்ளனர். விறகினை வாங்க முற்படும் போது விறகு வியாபாரிகளும் வெறும் வளவுகளிலுள்ள மரங்களை தறித்து விறகாக்குகின்றனர் அவ்வாறு பெறும் விறகின் விலையும் பன்மடங்கு அதிகரித்ததாகவே உள்ளது.

அதனைக் கொள்வனவு செய்து விறகுத் தேவையினைப் பூர்த்தி செய்ய முற்படுகின்ற அன்றாடம் உழைத்து உண்பவர்களும், இடம்பெயர்ந்தவர்களும் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

விறகுப் பாவனையைக் கட்டுப் படுத்துவதே தற்போது மிகச் சிறந்ததொரு வழி முறையாகும். இதற்கு சிறந்த வழி இரட்டை சூட்டடுப்பினை பாவிப்பதேயாகும். இதனைப் பயன் படுத்துவதன் முலம் 30% வீதமான விறகினை மீதப்படுத்த முடியும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இரட்டைச் சூட்டடுப்பு பாவனை முறையானது பெரிய தொழில் நுட்பம் கொண்டதல்ல. விறகிற்காக அதிக பணத்தை செலவிட்டுக் கொண்டிருக்கின்ற இந்தச் சமயத்திலே இரட்டைச் சூட்டடுப்பினுடைய உருவாக்கம் ஒரு வரப்பிரசாதம் என்றே கூறலாம். விறகினை சிக்கனப்படுத்துவதோடு மட்டுமல்லாது நேரத்தினையும் மிச்சப் படுத்திக் கொள்ளக் கூடியதாக இருப்பது இந்த அடுப்பின் சிறப்பம்சங்களில் ஒன்றாகும். அடுப்பினை மூட்டியவுடன் இரண்டு அடுப்புக்களிலும் பாத்திரம் வைக்க வேண்டும்.

முதல் அடுப்பிலே பாத்திரத்தை வைக்கின்ற போது அடுப்பின் விளிம்புடன் பாத்திரம் ஒட்டியிருக்க வேண்டும். மாறாக இரண்டாவது அடும்பிலே பாத்திரத்தை வைக்கின்ற போது இடைவெளி இருக்கக் கூடியவாறு வைக்க வேண்டும். விறகுகளை வைக்கின்ற போது நிறைய விறகுகளை அடையாது இரண்டு அல்லது மூன்று விறகுத் துண்டுகள் வைத்தால் போதுமானது. இந்த அடுப்பிலே காணப்படுகின்ற இரண்டு துவாரங்களையும் எந்தவித காரணம் கொண்டும் அடைக்கக் கூடாது. இவ் விதமான முறைகளைக் கையாளுகின்ற போது விறகுச் சிக்கனம் கடைப்பிடிக்கப்படும்.

விறகினால் ஏற்படும் அதி கூடிய செலவீனத்தை ஓரளவு சிக்கனப் படுத்துவதாக இரட்டைச் சூட்டடுப்புகள் விளங்குவதோடு எமது வனவளம் அழிக்கப்படுவதிலிருந்து பாதுகாக்கப் படுவதோடு மக்களின் பொருளாதாரக் கஷ்டங்களையும் குறைத்துக் கொள்வதற்குமாக தோன்றியுள்ள அதி சிறந்த சாதனமாக இது விளங்குமென்பதில் எந்த விதமான ஐயமுமில்லை. ❁

---

*பம்பாயில் அண்மையில் நடந்த (12.3.93) இந்து முசுலிம் கலவரத்தால் இந்தியநாட்டிற்கு ஏற்பட்ட இழப்பு 80பில்லியன் ரூபாக்கள் என (8000 கோடிரூபா) அண்ணளவாக கணக்கிடப்பட்டுள்ளது. பொருட்கள், சேவைகள் இழப்பு 12.5பில்லியன் ரூபா. வர்த்தக இழப்பு 10 பில்லியன் ரூபா. ஏற்றுமதி இழப்பு 20 பில்லியன ரூபா. அரசுக்கு வருமதியான வரி இழப்பு 1.5 பில்லியன் ரூபா. சொத்துகளுக்கு ஏற்பட்ட இழப்பு 40 பில்லியன்ரூபா.*

---

*நாய் தூங்குவதற்கு முன்னர் தூங்கும் இடத்தை சுற்றி வட்ட மிட்டு காற்றுவரும் திசையை அறிந்து அதற்கு எதிராக மூக்கை வைத்து படுத்து எதிரியின் வாடையை அறியும் வண்ணமே படுக்கும்.*

# பொது சமையல் கூடமும் பெண் விடுதலையும்

—அ. கௌரிகாந்தன்

பொதுச் சமையற் கூடங்கள் அமைப்பதன் மூலம் பெண்கள் இடுப்பொடியும், சலிப்பூட்டும் வீட்டுக் குசினிவேலைகளில் இருந்து விடுபடுவார்கள் என்பது உண்மையே. ஆனால் இவ்விதம் விடுபடுவது பெண் விடுதலையைப் பெற்றுத்தந்துவிடுமா என்பது பிரச்சினைக்குரிய ஒரு கேள்வியாகும்.

குசினி சமையல், சம்பளம் இல்லாத, சமூக கௌரவம் அல்லது புகழ்ச்சி இல்லாத ஒரு தொழில் என்று கருதப்படுவதால் தான் இன்று அது பெண்கள் கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்பளத்துடன் கூடிய சமையல்களும் பொதுவைபவங்களில் சம்பளம் இல்லாவிட்டாலும் மதிப்பு கொடுக்கப்படும் சமையல்களும் ஆண்கள் கைகளுக்கே மாறிவவருகிறது. அங்கெல்லாம் ஆண்கள் அவசியமாகி வருகிறார்கள். பொது சமையல் கூடம் அமைத்தால் அங்கும் ஆண்கள் தான் ஆதிக்கம் செலுத்துவார்கள். ஏனெனில் பொதுசமையற் கூட சமையல் சம்பளம் உள்ள ஒரு தொழிலாய் ஆகிவிடுமல்லவா?

ஆண்மேலாதிக்க சமூகத்தின் கட்டுக்கோப்புக்குள் பெண்கள் இருக்கும் வரை பொதுச் சமையல் கூடம் பெண்களை குசினிவேலையில் இருந்து விடுவிக்கமாட்டாது, மாறாக அதிலிருந்து துரத்தியடிக்கும். வீட்டில் பெண்களால் செய்யப்படும் வேலைகள் மேலும் குறைக்கப்பட்டு விடும். இதனால் வேலையின்றி சும்மா வீட்டில் குந்தியிருப்பவர்கள் பெண்கள் என்ற குற்றச்சாட்டு மேலும் வலுப்பெறும். பொதுச் சமையல் கூடத்தில் சமைக்கப்படும் உணவை வாங்குவது ஆணின் சம்பாத்தியத்தில் தானே என்ற வாதம் முன்வைக்கப்பட்டு பெண்மேலும் அடிமையாக்கப்படுவாள். ஆகவே எது பெண்ணினத்தின் விடுதலைக்காக என கொணரப்படுகிறதோ அதுவே பெண்ணினத்தை அடிமைப்படுத்தும் விலங்காக மாறிவிடும்.

பெண்களின் உழைப்பு சமூக செல்வங்களை உருவாக்கி உபரியையும் சம்பாதிப்பதற்கான வாய்ப்புகள் முதலில் ஏற்படுத்திக் கொடுபட வேண்டும். அதாவது பேச்சு மொழியில் சொல்வதானால் பெண்கள் சம்பளம் பெறும் உழைப்பாளர்களாக மாற்றப்படக்கூடிய பொருளாதார வாய்ப்புகள் ஏற்படுத்தப்படவேண்டும். அப்போதுதான் பெண்ணின் மதிப்பு சமூகத்தில் உயரும். ஆண் மேலாதிக்கத்தை நிலைநிறுத்தி வைத்திருக்கும் பொருளாதார வேர்கள் அறுக்கப்படும். இவ்விதமான ஒரு சூழலில் பொதுச்சமையல் கூடம் பெண்விடுதலையை நிச்சயம் முன்னோக்கித்தள்ள உதவிபுரியும்.

-இக்கட்டுரை சாளரம் மார்ச் — ஏப்ரல் இதழில் பிரசுரமான "அடுப்புக்குள் வேகும் நிலைமாற்ற" என்ற தலைப்பிலான கட்டுரைக்கான கருத்தாக எழுதப்பட்டது.

12. 11. 1992 அன்று சாளரம் கருத்து நிகழ்வு வேளையில் சில நிமிடங்களுக்குள்ளாக உடனடியாய் பிறந்திட்ட மூன்று கவிதைகள்.

## எங்கள் பெருமையை உணர்வோம்

முகில்களை உடையாய் உடுத்து
வானம் தன்னை மறைத்துக் கொண்டது.
எமது சுதந்திர உணர்வை
மறந்து நாமும் நம்மைப்
புதைத்துக் கொண்டோம்.
எம்மைத் தொட்டுத் தழுவும் வீரம், பண்பு
எங்கள் தேசப் பெருமைகள் யாவும்
சாளரம் ஊடே எம்மைச் சேரவே
மீண்டும் நாமும் புதிதாய் மகிழ்ந்து
எங்கள் பெருமையை உணர்ந்து கொண்டோம்.

செல்வி சி. சிவானி
யா / இந்துமகளிர்கல்லூரி.

## காத்திருப்போம் வரவுக்காக

இருட்டறையில்
சிந்தனையைச் சிறைவைத்துச்
சுடுநெருப்பில் வீழ்ந்துள்ள
சாதாரணமாண(ன) வர்கள்
நாம்.
வழிதெரியாச் சுழலில்
சிக்கிச் சுழன்றபோது
எம்கையில் அகப்பட்ட சாளரத்தை
ஆவலோடு திறந்தோம்.
தேசத்தின் சுதந்திரமூச்சை




அதனூடு சுவாசித்தோம்.
வழிமேல் விழிவைத்தும்
காத்திருப்போம் - வரவுக்காக.

செல்வி கஜலக்சுமி கைலாசபிள்ளை
யாழ் / இந்துமகளிர் கல்லூரி.

## கருப்பைக்குள் ஒளியின் பிறப்பு

என்கண்களே! பார்
காலத்தின் கருப்பைக்குள்
ஒளியின் பிறப்பு
கண்களே மீண்டும் நன்றாகப்பார்
உயரவானமும்
எங்கள் ஊரின் ஒதுக்குப்புறங்களின்
வெளிப்பாடும்
அங்கே தெரியும்.
தெரிந்ததை எழுதிட
ஓர்களம் இருக்கு
இளைஞர்களுக்காய்
இருக்கவே இருக்கு 'சாளரம்'.

செல்வி மகிழ்நங்கை பொன்னம்பலம்
யாழ் / இந்து மகளிர் கல்லூரி.

# எரித்திரியா புதிய ஒரு நாடு

ஆபிரிக்க கண்டத்தில் காலனித்துவ ஆட்சிக் காலத்தின் பின் முதன் முதலாக உருவாகிய புதிய நாடு எரித்திரியா ஆகும்.

30 ஆண்டுகாலம் தன் விடுதலைக்காக போராடிய எரித்திரியாவை உலக நாடுகள் புதிய ஒரு நாடாக இவ்வாண்டு மே திங்கள் 24ம் நாள் ஏற்றுக்கொண்டன.

ஆபிரிக்கக் கண்டத்தில் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ள எரித்திரியா தனது கிழக்கு எல்லையாக செங்கடலையும், வடமேற்கு எல்லைகளாக சூடானையும், தெற்கு எல்லையாக எத்தியோப்பியாவையும் கொண்டுள்ளது.

124.000 ச. கி. மீ. பரப்பளவு கொண்ட எரித்திரியாவில் 35 இலட்சம் மக்கள் வாழ்கின்றனர். அரபு, நீக்ரோ கலப்பினத்தைச் சேர்ந்த இம்மக்களில் அரைவாசிப் பேர் முசுலிம்கள். மற்றைய அரைவாசிப்பேர் கிறிஸ்தவர்கள் ஆவர்.

இங்கு ஒன்பது பெரிய இனக் குழுக்கள் உண்டு. பெரும்பாலோரால் ரைகிரே (TIGERE) மொழியே பேசப்படுகின்றது.

1890ல் இத்தாலியின் காலனித்துவ நாடாகிய எரித்திரியா இரண்டாம் உலகப் போரின்பின் ஐக்கிய நாடுகள் சபையின் பொறுப்பின் கீழ் பிரித்தானியாவின் மேற்பார்வையின் கீழ் வந்தது.


1952ஆம் ஆண்டு இந்நாடு எத்தியோப்பியாவுடன் பலவந்தமாக இணைக்கப் பட்டது. 1958ல் எரித்திரியாவின் விடுதலைக்காக போராட எரித்திரிய விடுதலை முன்னணி என்ற அமைப்பு உருவாகியது. இவ் முன்னணி தனது முதல் படைய நடவடிக்கையை 1961ல் தொடங்கியது.

இவ்வமைப்பில் கட்டுப்பாடு, ஒழுங்கின்மை காரணமாக இவ்வமைப்பில் இருந்து பிரிந்தோர் எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி (EPLF) என்ற அமைப்பை 1970ஆம் ஆண்டளவில் உருவாக்கினார்கள்.

எரித்திரிய மக்கள் வெவ்வேறு காலகட்டங்களில் அமெரிக்க ஆதரவு பெற்ற எத்தியோப்பியாவுடனும், சோவியத் ஒன்றியத்தின் ஆதரவு பெற்ற எததியோப்பியாவுடனும் போரிட்டனர்.

தோல்வி கண்ட விடுதலைப் போர்களில் ஒன்றாகவே எரித்திரிய விடுதலைப் போராட்டம் அண்மைக் காலம் வரை கணிக்கப்பட்டது. யாரும் அப்போராட்டம் பற்றி அண்மைக்காலம்வரைபேசவிரும்பியதில்லை.

போரினாலும், பஞ்சத்தினாலும் இலட்சக்கணக்கில் மக்கள் இறந்தனர். பெருமளவு அழிவைச் சந்தித்த




போதும் சளையாது 30 ஆண்டுகளாக போராடிய எரித்திரிய மக்களின் உறுதியை, வெற்றியை இன்று போற்றிப் பேசாதோரே இல்லை என்று கூறலாம்.

இப்போராட்டத்தில் எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி மட்டும் தமது போராளிகளில் 60,000 பேரை இழந்துள்ளது.

எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி அமைப்பின் தலைவரான இசையாசு அவேவேர்க்கி இன்று எரித்திரிய நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளார்.

நாமும் எரித்திரிய மக்களின் வீரத்தை போற்றி வணங்குவோம்.

— அறிவொளி

அமெரிக்க வான்வெளி ஆராய்ச்சியாளர்கள். வான் வெளியில் இருந்து எடுத்த படங்களை ஆராய்ந்தபோது இராமேசுவரத்தில் இருந்து இலங்கைக்கு பாலம் ஒன்று இருப்பதை கண்டுள்ளனர். இந்தப்பாலம் தண்ணீரின் அடியில் மேலேயிருந்து பார்க்கும் அளவுக்கு தெளிவுபடத் தெரிகிறது.

நீண்டு வளர்ந்து வானுயர
வாழ்த்துகின்றோம்.

தரமான—
புழுங்கல் அரிசி தரம் I, II.
பச்சை அரிசி
சம்பா அரிசி

முழு நம்பிக்கையுடன் பெற்றுக்கொள்ளலாம்.

# விநாயகர் அரிசி ஆலை

(விநாயகர் தரும நிதியம்)

கடற்கரை வீதி - பருத்தித்துறை.

# பகலவன் பதில்கள்

**த. கலைமகள், கந்தர்மடம்.**

கே:- ஆணாதிக்க நடவடிக்கைகள் என்று தாங்கள் எவற்றைக் கருதுகின்றீர்கள்?

ப:- பெண்ணின் சுதந்திரத்தையும் சுயகௌரவத்தையும் மதிக்காத மனோபாவத்தில் மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகள்.

**மு. இதயரூபன், வவுனியா.**

கே:- கலை, இலக்கியங்கள் ரசனைக்குரியதாகவும் மகிழ்ச்சிக்குரியதாகவும் மட்டுமே அமைவது சரியானதா?

ப:- இல்லை. சமகால சமுதாயத்தைச் சரியான முறையில் பிரதிபலிக்கவும் வேண்டும். சமூக மேம்பாட்டுக்காகக் குரல் கொடுக்கவும்வேண்டும்.

**கு. சந்திரகுமாரி, கந்தர்மடம்.**

கே:- முத்தமிழ் என்று சொல்லப் பட்டதமிழ், இன்று ஐந்தமிழ் (அறிவியற்தமிழ், தொழில் நுட்பத் தமிழ்) என்று ஆகிவிட்டது எனச் சிலர் சொல்வது சரியா? இதனால் தமிழின் தனித்தும் குறைந்து விடாதா?

ப:- சரியல்ல. அறிவியல், தொழில் நுட்பம், அரசியல், படையியல் போன்ற ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு தமிழ் என்றால் மொழியின் தனித்துவம் குறையத்தான் செய்யும்.

**கோ. கிருபராஜா, நல்லூர்.**

கே:- பூநகரி பாதை விடயம் அண்மையில் சாத்தியமாகுமா?

ப:- எனக்கு சோதிடம் தெரியாது.

**பா. விஸ்வலிங்கம், திருநெல்வேலி.**

கே:- 'பூமராங்' என்றால் என்ன?

ப:- அவுஸ்திரேலியாவில் சுதேசிகளால் பயன்படுத்தப்பட்ட ஒருவகை ஆயுதம். சரியாகக் கையாளாவிட்டால் எய்தவரையே திரும்பிவந்து தாக்கும். அரசியலில் ஒருவர் மேற்கொள்ளும் தந்திரோபாயம் அவருக்கே பாதிப்பை ஏற்படுத்துவதைத் குறிப்பதற்கு இச்சொல் பயன்படுத்தப்படுகின்றது.

**வி. நித்தியானந்தன், மானிப்பாய்.**

கே;- காவதம் என்று பழைய இலக்கியங்களில் சொல்லப்படும் தூரம் எவ்வளவு?

ப:- பத்து மைல்.

**ச. கருணாகரன், புத்தூர்.**

'தற்குறிப்பேற்ற அணி' என்றால் என்றால் என்ன?

'மேலே வானம் வெட்கிச் சிவந்தது'' என்றும் ''நாணற் புற்கள் நாணிக் குனிந்தன'' என்றும் இலக்கியப் படைப்புகளில் படிக்கிறோம்.

இயற்கையின் இயல்பான தோற்றங்களுக்கு மனிதக் குணாதிசயங்களைக் கற்பிக்கும் இவ்வாறான பல வகைப்பட்ட எழுத்துகளைப் படித்திருக்கிறோம். இதைத் தற்குறிப்பேற்ற அணி என்பர்.

மாக்சிம் கார்க்கி இதைப் பின் வருமாறு விளக்குகிறார்.

''இதற்கு Anthropomorphism. என்று பெயர். இது இரண்டு கிரேக்கச் சொற்களால் ஆனது. Anthropos என்றால் மனிதன் என்று பொருள், Morphe என்றால் வடிவம் அல்லது பிம்பம் என்று பொருள். இங்கே ஒன்றைக் கவனிக்கலாம். தான் பார்க்கும் பொருட்களுக்கு மனிதக் குணாதிசயங்களைக் கற்பிக்கும் போக்கு மனிதனிடம் உண்டு. இவற்றை அவன் கற்பனை செய்துகொண்டு, அவற்றை இயற்கைத் தோற்றங்களுடனும், தனது உழைப்பாலும் மனத்தாலும் சிருஷ்டித்த எல்லாவற்றுடனும் சம்பந்தப்படுத்தி விடுகிறான்''. □

---

*இருநூறு ஆண்டுகளுக்கு முன் திப்பு - ஆங்கிலேயர் சண்டையில் பல வெள்ளைச் சிப்பாய்களின் மூக்கை திப்பு அறுத்துவிட்டான். அறுந்து தொங்கிய சிப்பாய்களின் மூக்குகளை பூனாவில் இருந்த மராட்டிய ஆயுர்வேத மருத்துவர்கள் சரி செய்து விட்டனர். இத்தகவல் 1794ல் மெட்ராசு கசட்டில் வெளிவந்தது. அதைப் படித்த காரடே என்ற ஆங்கில மருத்துவர் இலண்டன் திரும்பியதும் அங்கு அதே முறையில் அறுக்கப்பட்ட உறுப்புக்களை ஒன்று சேர்க்கும் Rhino Plasty இல் வெற்றிகண்டார். அதன் வளர்ச்சியே இன்றைய Plastic Surgery ஆகும்*

---

*வார்த்தைக்கு வார்த்தை மாறாமல் மொழி பெயர்ப்பு செய்வது Literal Translation எனப்படும். மூல நூலின் மையக்கருத்துக்களை மட்டும் மாற்றாமல் தனது கருத்துக்கு ஏற்றமாதிரி செய்யப்படும் மொழியாக்கம் Transcreation என அழைக்கப்படுகின்றது.*

# கையிலே கதிர்வீச்சுக் கருவி

தற்போதைய தொடர்புச்சாதன உலகிலே பாரிய மாற்றத்தை விளைவித்த Cellular Phones (செலூலர் தொலைபேசி) எனப்படும் மிக நவீன தொலைபேசியைப் பற்றிய செய்தி இது. கைக்கு அடக்கமாக, எங்கும் எடுத்துச் செல்லக்கூடிய, இருக்கும் இடத்திலிருந்து கொண்டே உலகின் எம் மூலையோடும் தொடர்பு கொள்ளக்கூடிய இக் கருவி பார்வைக்கு 'வோக்கி ரோக்கியை' விட சற்றுப் பெரிதாக காணப்படும். அண்மைக்காலமாக சிறிலங்காவில் கூட 'செல்டேல்' 'கோல்லிங்' என இரு தனியார் நிறுவனங்கள் இதனை புகுத்தியுள்ளன. மிக்க வரவேற்பை பெறும் கருவி இது.

ஆனால் இவ்வகை தொலைபேசியை பயன்படுத்துவோர் அதிர்ச்சியடையக் கூடிய செய்தியொன்றை அமெரிக்க தொலைக்காட்சி நிறுவனமான சி. என். என். அண்மையில் ஒளி பரப்பியது. இவ்வகை தொலைபேசியை பயன்படுத்தியதாலே தனது மனைவி மூளை வளரி (Brain Tumoun) நோய் காரணமாக சாவடைந்ததாக டேவிட் றேனார்ட் என்பவர் கூறியதாக இச் செய்தி அமைந்தது. இதைத் தொடர்ந்து விவாதங்கள் தொடர்கின்றன. இதனால் இதனைப் பயன்படுத்துவோர் மத்தியில் குழப்பத்தை இவை தோற்றுவிக்கின்றன.

இவ்வகை தொலைபேசிகள் தமது குறியொலிகளை மின்காந்த அலைகளாக வெளியிடுகின்றன. ஆனால் இதுவும் ஒருவகை கதிர்வீச்சுதான். நீண்டகாலமாகவே தொலைக்காட்சி பெட்டிகள் நவீன நுண்வகை மின்னடுப்புக்கள், வீடியோ ஒளிபரப்பு கணனிகள் என்பன இயங்கும் மையங்கள் மின் கடத்திகள் போன்றவற்றினது வெளிப்படும் கதிர்வீச்சு அபாயங்கள் பற்றி விவாதிக்கப்பட்டே வருகின்றது. என்றும் இவ்வகை தொலைபேசிகள் உயர் அழுத்த அலைகளில் செயற்பட்டு ஒவ்வொரு ஒலிக்கும் கூடிய அளவு கற்றையை வெடிக்க வைப்பதே தீர்வான விடயமாக கருதப்படுகிறது. எனினும் இவை வெளியிடும் அலைகள் ஆற்றல்குறைந்த, வெப்பம் குறைந்ததாக இருப்பதால் தீங்கில்லை என்றும் கூறப்படுகின்றது, ஆனால் இற்றை வரை இவை வெளியிடும் கதிர்வீச்சு எவ்வகைகளில் மனித உடலின் கலங்களை பாதிக்கும் என்பது குறித்தோ அல்லது புற்றுநோய்க்கும் இதற்கும் உள்ள தொடர்பு பற்றியோ பூரணமான ஆய்வுகள் செய்யப்படவில்லை. விளக்கங்கள் கொடுபடவில்லை. எனவே தொலைக்காட்சி முன் மக்கள் அமர்ந்து பொழுதை கழிப்பது எவ்வாறு குறைவில்லையோ அவ்வாறே இக் கருவி வழங்கும் வசதிகளை உடனடியாக எவரும் கைவிடப் போவதுமில்லை.

# காத்திருந்து பெற்ற விருதுகள்



கிளின்ட் ஈஸ்டவுட் அல் பாசினோ

இந்த ஆண்டிற்கான ஆஸ்கார் விருது பெற்றவர்களில் நடிகர் அல்பாசினோ, நடிகரும் இயக்குநருமான கிளின்ட் ஈஸ்ட்வுட் ஆகிய இருவர் குறிப்பிடத்தக்கவர்கள்.

52 வயதுடைய சிசிலிய தேசத்தவரான அல்பாசினோ, 'சென்ட் ஓவ் எ வுமன்' என்ற படத்தில் விசித்திர எண்ணங்கள் கொண்ட கண்தெரியாத ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியாக சிறந்த முறையில் நடித்தமைக்காக இவ்விருதைப் பெற்றார். சுமார் இருபது ஆண்டுகளாக பல்வேறு சமயங்களில் ஆஸ்கர் விருதுக்காக இவர் பெயர் அறிவிக்கப்பட்டபோதிலும் கடைசி வேளைகளில் விருது கிடைக்காமல் போனமையால் விரக்தியடைந்திருந்தார். இம்முறை விருதினைப் பெற்றுக்கொள்கையில் அவரின் கண்கள் குளமாயின.

39 ஆண்டுகளாக நடித்துவரும் கிளின்ட் ஈஸ்ட்வுட் இம்முறை ஆஸ்கர் விருதினை சிறந்த இயக்குநருக்காகப் பெற்றார். இவர் இயக்கிய 'அன்வர்கிவ்வன்' என்ற படத்திற்காகவே இவ் விருது வழங்கப்பட்டது.

'THE CUT WHORE KILLINGS' என்ற கதை பத்து ஆண்டுகளுக்கு முன்பு திரைப் படத்திற்காக வாங்கப்பட்டது. இதில் வரும் கதாநாயகன்போல் வயது வரும்வரை (62வயது) பத்து ஆண்டுகள் கிளின்ட் ஈஸ்ட்வுட் காத்திருந்தார் என்பதும், இப்படம் திரையிடப்பட்ட வார இறுதியிலேயே ஒரு கோடியே 50 இலட்சம் டொலர்கள் சம்பாதித்துக் கொடுத்தது என்பதும் குறிப்பிடத்தக்கனவாகும்.

தங்களுக்குத் தரமான சேவை புரிய
'சாந்தி கிறைண்டிங் மில்'

காத்திருக்கிறது!

அரிசி குற்றல், திட்டல், உடைத்தல்
மாவு அரைத்தல், தூள் அரைத்தல்
பயறு, உழுந்து திரித்தல்.

சகல வேலைகளையும் நம்பிக்கையுடனும்
தரமாகவும் பெற்றுக் கொள்ள நீங்கள்
நாடவேண்டிய இடம்—

# சாந்தி கிறைண்டிங் மில்

சங்கரத்தைச் சந்தி
வட்டுக்கோட்டை.

## குடா நாட்டில் ஆங்கில மருந்து
## வகைகளின் மொத்த விற்பனையாளர்கள்

## 'ஆர். வி. ஜி. மெடிக்கல்ஸ்'

**சகல ஆங்கில மருந்து வகைகளையும் மொத்தமாகவும்,
சில்லறையாகவும் நம்பிக்கையுடன் பெற்றுக் கொள்ள
நீங்கள் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டிய பெயர்**

**'ஆர். வி. ஜி மெடிக்கல்ஸ்'**

# ஆர். வி. ஜி. மெடிக்கல்ஸ்

**504, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.**